In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவாகமங்களில் மாஸ பூஜை

விதியும் விளக்கமும்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்

சிவாகமங்களில் மாஸ பூஜை விதியும் விளக்கமும்



ஆசிரியர், தொகுப்பு :

சிவஸ்ரீ S.ஆனந்த ஈசாநசிவம்
ஆசிரியர், சிவஞானாலயம், (வேதாகம பாடசாலை)
குளித்தலை.

சிவஸ்ரீ. K. சிவானந்த சிவம், திருவண்ணாமலை.

வெளியீடு :

ஸ்ரீ ஆலால சுந்தர சமூக சேவா சங்கம், திருவண்ணாமலை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்

நூல் விவரம்

நூல் பெயர்	:	**சிவாகமங்களில் மாஸ பூஜை விதியும் விளக்கமும்**
பொருள்	:	**மாஸபூஜை விளக்கம்**
மூலம்	:	**ஶ்ரீமத் காரணாகமம் (உத்தரபாகம்)**
மொழி	:	**சம்ஸ்க்ருதம், தமிழ்**
எழுத்து	:	தேவநாகரம், க்ரந்தம், தமிழ்
வெளியீடு	:	ஶ்ரீ ஆலால சுந்தர சமூக சேவா சங்கம், திருவண்ணாமலை.
நாள்	:	26-09-2015
உரை ஆசிரியர்	:	S. ஆனந்த ஈசாந சிவம்,
தொகுப்பு	:	K. சிவானந்த சிவம்.
அச்சுக்கோர்ப்பு	:	திரு.R. சபரி கிரீச சிவம், திரு.சம்பந்தம், திரு.D.வாசுதேவன்
அளவு	:	1/5 அளவு
எழுத்து அளவு	:	11, 12
தாள்	:	மேப்லித்தோ 70 GSM
பக்கம்	:	174
ப்ரதிகள்	:	500
வெளியீடு உதவி	:	சில்வர் பயர் ஒர்க்ஸ் பேக்டரி, சிவகாசி.
உத்தேச விலை	:	ரூ. ₹ 250 /

புத்தக்கங்கள் கிடைக்குமிடம்

K.சிவானந்த சிவம்
திருவண்ணாமலை.
செல் : 80151 00160

S. ஆனந்த ஈசாந சிவம்
கடம்பர் கோயில், குளித்தலை.
செல் : 81488 31820

S.ஸ்வஸ்திக் சிவம்
திருவண்ணாமலை.
செல் : 99521 85212

S. பிரபு சிவம் (பாலகணபதி சிவம்)
புல்லலூர், காஞ்சிபுரம்.
செல் : 97861 67309

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

வாழ்த்துரை : **சிவஸ்ரீ Dr.பால.ஸர்வேஸ்வர சிவாச்சார்யர்.**
ஆசிரியர், ஸ்ரீமத் ஸ்ரீகண்ட சிவாச்சார்யர், வேதசிவாகம வித்யா பீடம், காரைக்கால்

ஆசியுரை : **சிவஸ்ரீ V.சோமசேகர சிவாச்சார்யர்.**
முதல்வர், சைவாகம கலாச்சார வித்யா கேந்த்ரம், சென்னை.

பதிப்புரை : **சிவஸ்ரீ S.ஆனந்த ஈசான சிவம்.**
ஆசிரியர், சிவஞானாலயம், (வேதாகம பாடசாலை), குளித்தலை.

நன்றியுரை : **சிவஸ்ரீ K.சிவானந்த சிவம், திருவண்ணாமலை.**

மாஸ பூஜை வினா விடை : **சிவஸ்ரீ S.ஆனந்த ஈசான சிவம்.**
ஆசிரியர், சிவஞானாலயம், (வேதாகம பாடசாலை), குளித்தலை.

சித்திரை மாதத் தமன பூஜை
வைகாசி மாதக் கந்த பூஜை
ஆனி மாதப் பழ பூஜை
ஆடி மாத பால் பூஜை
ஆவணி மாதச் சர்க்கரை பூஜை
புரட்டாசி மாத அபூப (அப்பம்) பூஜை
ஐப்பசி மாத அன்னபூஜை
கார்த்திகை மாதத் தீபபூஜை
மார்கழி மாத நெய்ப்பூஜை
தை மாதத்தேன் பூஜை
மாசி மாத நெய்கம்பளப் பூஜை
பங்குனி மாதத்தயிர் பூஜை

மேலும் சில ஆகமங்களில் மாஸப் பூஜைகள்

அம்சுமத்தாகமத்தில் மாதப் பூஜை
சூக்ஷ்மாகமத்தில் மாதப் பூஜை
காமிகாகமத்தில் மாதப் பூஜை
குமார தந்திரத்தில் மாதப் பூஜை
காரணாகமத்தில் (பூர்வப் பாகத்தில்) மாதப் பூஜை

பிற்சேர்க்கை

உதகத் திரவியங்கள் விவரம்
பூஜைக்குரிய புஷ்பங்களின் கட்டுரை : **சிவஸ்ரீ G. கோடீஸ்வர சிவாச்சாரியார்.**
அருள்மிகு தர்பாரண்ணிஸ்வரர் தேவஸ்தானம், திருநள்ளாறு.
பூக்களின் பெயர்கள்
மண்டலங்களின் ஆராதனைக் கட்டுரை : **சிவஸ்ரீ K.சிவானந்த சிவம்.**
மண்டல வரைபடங்கள்
பதபதார்த்தங்கள்
பார்வையிட்ட புத்தகங்களின் விவரம்

250

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புத்தக வெளியீட்டு விழா

முதல் புத்தக வெளியீடு :

சிவதீக்ஷா வைபவம்

நாள் : 13-02-2013 புதன்கிழமை

இடம் : ஸ்ரீ அருணகிரிநாதர் திருக்கோவில்

திருவண்ணாமலை.

இரண்டாம் பிரதி புத்தக வெளியீட்டு விழா

சிவஸ்ரீ D.S.ராஜகணபதி சிவாச்சாரியார்

ஸ்ரீமதி லக்ஷ்மி ராஜகணபதி அவர்கள்

அருள்மிகு அருணாசலேஸ்வரர் தேவஸ்தானம்,

அர்ச்சகர் அருள்மிகு கோபால விநாயகர் கோயில், திருவண்ணாமலை.

அவர்களின் உக்ர ரத சாந்தியில் வெளியிடப்பட்டது.

நாள் : மன்மத வருடம் புரட்டாசி மாதம் 9-ஆம் தேதி

26-09-2015 சனிக்கிழமை

இடம் : **ஆனந்தா திருமண மண்டபம்**, திருவண்ணாமலை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்த்துரை

உ
श्री सुन्दरगणपतये नमः
श्रीमत् श्रीकण्ठ शिवाचार्य शोधप्रतिष्ठानम्
THE SRIMATH SRIKANTA SIVACHARYA RESEARCH INSTITUTE
Runby Srimath Srikanta Sivacharya Trust (Regd)
09, Nitheeswaram Agraharam, Kovilpathu, Karaikal- 609 605, U.T. of Puducherry, India.
Ph.: (04368) - 226644, 231116 e.mail : srikanthavijayam@yahoo.co.in

DR. SIVASRI. BALA. SARVESWARA GURUKKAL, M.A., M.Phil., Ph.D.,
Founder - Managing Trustee & Hony.Director
PRINCIPAL - SRIMATH SRIKANTA SIVACHARYA VEDA SIVAGAMA VIDYAPEETAM.

Date :
Ref. :

[illegible]
[illegible]

என்கிற ஆகம வசனத்தால் ஆன்மர்களின் ப்ராரப்தம் ஸஞ்சிதம் - ஆகாமி ஆகிய மூன்று கர்மாக்களையும் போக்கி ஆத்மாவிற்கு ஞானத்தைக் கொடுக்க வல்லதானது பூஜா ஆகும்.

அந்த பூஜையும் நித்யம்-நைத்தியமம் - காம்யம் எனவும் ஆகுந்தக நித்யம் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதில் மாஸ பூஜா ஆகுந்தக நித்யம் என்ற வகையில் அமைந்துள்ளது.

ஆகவே மாஸ பூஜை அவச்யம் செய்யப்பட வேண்டியது ஆகும். மாஸ பூஜை செய்வதால்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

பாபத்தை அழித்தல் - சாந்தி - எதிரியை அழித்தல் - அனைத்து வேள்வி பயன் - நோயற்ற வாழ்வு - அறிவாற்றல் - புகழ் - வெற்றி ஆகியவை பலனாகக் கிடைக்கிறது என்பது மேற்படி வசனத்தில் புலப்படுகிறது.

இவ்வாறு மிகவும் சிறப்பு வாய்ந்த மாஸ பூஜா விபரத்தினை என்னுடைய மாணவன் சிரஞ்சீவி சிவானந்தமும், சிவஶ்ரீ அவனாசி சுந்தரமூர்த்தி சிவாச்சாரியர் அவர்களின் மாணவன் சிரஞ்சீவி ஆனந்த ஈசாந சிவமும் இணைந்து “**சிவாகமங்களில் மாஸ பூஜா**” என்ற நூலை மிகவும் சிரமப்பட்டு அழகாக தொகுத்துள்ளார்கள். இவர்கள் இருவருக்கும் எனது ஆசிகள். இந்நூலினை திருவண்ணாமலை ஸ்ரீ ஆலால சுந்தரர் ஸமூக ஸேவா சங்கம் வாயிலாக வெளியிடப்படுகிறது என்பதும் மகிழ்ச்சி அளிக்கிறது.

அன்புடன் சிவத்தொண்டன்
B. Sarveswara Gurukkal.

Trustees :
Sivasri S.V. DURAIYAPPA SIVACHARIYAR
Sri M.K. SUBRAMANIAN
Srimathi L. KALAVATHI
Srimathi USHA KRISHNAN
Sri R. SRINIVASAN
Sivasri C. RAMASAMY

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சிவமயம்

சாஸ்தாரம் விச்வ கோப்தாரம் சரணம் ப்ரபத்யே

ஆகம ப்ரவீணர். வியாகரண சிரோமணி. சைவாகம வித்வான்.
சைவாகமக்கு சூடாமணி. சிவாகம ஸார்வபௌம. சிவாகம அருட்செல்வர்.
சிவஸம்வித் ஸபர்யா பாராவாரீணர். சம்ஸ்கிருத சேவாரத்தினம். சிவாகம வாசஸ்பதி.
யாக ஸர்வஸாதக திலகம். ஜோதிட,வாஸ்து,சில்ப கலாபிக்ஞர். சிவாகம பரீக்ஷாதிகாரி.
ஸ்ரீ மஹாசாஸ்தா உபாஸகர் அகோரசிவம். என்கிற

சிவஸ்ரீ. **வி. சோமசேகர சிவாசார்யர்,** M.A.

முதல்வர். சைவாகம கலாசார வித்யா கேந்திரம். சென்னை-1.
அனைத்திந்திய ஆதிசைவ சிவாசார்யர்கள் சேவாசங்கத்தின் முன்நாள் தமிழ்மாநில இணைச்செயலாளர்
1980-86 ல் சென்னை சேத்பட் வேதாகமபாடசாலையின் சிவாகம பண்டிதர்
1987-92 ல் மாமல்லபுரம் அரசினர் கட்டிட & சிற்பக்கலைக்கல்லூரியின் ஆகம சிரோமணி
1992-96 ல் கனடா டோரண்டோ ஹிந்து டெம்பிள் சொசைடியின் தலைமைஅர்ச்சகர்

அலுவலக முகவரி : சாம்பமூர்த்தி சிவாசார்யஸதனம், 2வது மாடி,
புதுஎண் 207, தம்புசெட்டி தெரு, சென்னை - 600001. மொபைல் : 98402 99352

வீட்டு முகவரி : புதுஎண் 54, 2வது மாடி,
ஐயப்பசெட்டித் தெரு, சென்னை - 600 001.



ஆசியுரை

நூல் : **சிவாகமோக்த மாஸ பூஜாவிதியும் விளக்கமும்**

அகண்டாகார நித்யவியாபகமாய் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஸச்சிதானந்த மூர்த்தியாகி அருளொடுநிறைந்த பரஞ்ஜோதிப் பரம்பொருளை வழிபடுவதற்காக நம் முன்னோர்கள் எல்லா ஊர்களிலும் திருக்கோயில்களை அமைத்துள்ளனர்.

தமிழகத்திலேதான் திருக்கோயில்கள் மிகுதி. நமது கோயில்களிலேதான் மூர்த்திகளும் வழிபடும் முறைகளும் அதிகம். நமது வாழ்வியில் நாகரீகமே கோயில் சார்ந்த நாகரீகமாகும். பிறவிக்கடலை நீந்திக்கடக்கும் பொருட்டு நித்தமும் இறைவனடியைப் போற்றி வழிபட்டு வாழ்வதே இல்லறத்தோரின் அறநெறியாம்.

கோயில்களில் நித்ய நைமித்திக பூசைகளும் விழாக்களும் முறையாக நடைபெற வேண்டியதன் அவசியத்தை சிவாகமங்களும்,திருமுறைகளும் நன்கு வ-யுறுத்திக் கூறுகின்றன. இது பற்றி திருமூலரின் திருமந்திரம்.

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வ- குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்களெல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில்தானே

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னவர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றும்
கன்னங் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே (திருமந்திரம்)

திருக்கோயில்களில் நடைபெறும் சிறப்பு பூசைத்திருவிழாக்களில் மக்கள் ஏராளமாகப் பங்கெடுத்துக்கொண்டு இறையருளை இன்றும் பெற்று வருகின்றனர். இதற்கு ஆலய நிர்வாகமும் அர்ச்சகரின் அறப்பணியுமே மூலகாரணமாகும். விசேஷ பூஜைகள் நடைபெறுவதாலேயே தெய்வஸாந்நித்யம் நிலைபெற்றதாகிறது. எனவே, சைவாகமங்கள் நித்திய பூஜையோடு நில்லாமல் “ **பூஜையாவிபுலம், ராஜ்ஜியம் அக்னிகார்யே நஸம்பதம்**” என்ற ஆகம வசனத்திற்கு ஏற்ப நைமித்திக பூஜைகளை விரிந்த அரசாட்சியையும், நிறைந்த செல்வத்தையும் பெற்றிட சிறப்புநோக்கில் சிறப்புகாலபூசைகளாக மாஸ பூசைகளைக் கூறியுள்ளன. பன்னிருமாதங்களிலும் அம்மாதசிறப்பு நட்சத்திரம் கூடியுள்ள நாளிலோ, பௌர்ணமி நாளிலோ தனித்தனிவிதி முறையைப் பின்பற்றி செய்யப்படுவது இதன் தனிச்சிறப்பு முறையாம். திருக்குறள் வான் சிறப்பு 8-ம் குறள் சிறப்பு பூஜையின் அவசியத்தை விளக்கும்.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு (குறள்)

இதன்பொருளாவது வானோர்க்கும் ஈண்டுச் சிறப்பொடு பூசனை செல்லாது=தேவர்கட்கும் இவ்வுலகில் மக்களால் செய்யப்படும் விழாவோடு கூடிய பூசனையும் நடவாது, வானம்வறக்குமேல் = மழை பெய்யாதாயின் என்றாவது, இங்கு நைமியத்தோடு கூடிய நித்திய மாக-ன் செல்லாது என்றார். நித்தியத்தில் தாழ்வு தீரச் செய்வது நைமித்திகம். ஆத-னால் அதனை முற்கூறினார் என்பார் பரிமேலழகர் ஆதலால் சிறப்பு பூஜை வளம்பெற அவசியமாகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லாச் சிவாலயங்களிலும் தினந்தோறும் நடைபெறும் பூசை நித்ய பூசை எனப்படும். நைமித்திகம் என்பது நிமித்தத்தாலாவது அதாவது தக்க காரணம் பற்றி வருவது. எடுத்துக்காட்டாக பஞ்சபர்வபூசை உற்சவம் எனலாம். இது மாச உற்சவம் என்றும் சொல்லப்படும். 1. அஷ்டமி, 2.கிருஷ்ணபக்ஷசதுர்தசி, 3.அமாவாசை, 4.பௌர்ணமி, 5.மாசப்பிறப்பு இவ்விழாக்களை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய அருளாளர்கள் பலரும் தமது பதிகப் பாடல்களில் ஆதிரைநாள் என்றும் தைப்பூசம் என்றும் மாசி மகம் என்றும் குறிப்பிட்டுள்ளதாலும் இவற்றின் தனிச்சிறப்பை நன்கு உணரலாம். உயிர்கள் உய்வு பெற உதவும் பரமஆப்தர் அருளிய ஆகமங்களின் பெருமை அளப்பரியதாகும். ஆகமங்களைத் தமிழில் அருளிய திருமூலரே திருமந்திரத்தில்

ஆர்அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆர்அறிவார் இந்த அகலமும் நீளமும்
பேர்அறியாத பெருஞ்சுடர் ஒன்று அதின்
வேரறியாமை விளிம் புகின்றேனே. என்று சொல்வாரானால் ஆகம உண்மைகளை நாம் எளிதில் புரிந்து கொள்ள முடியுமா ? எனவே இறைவனருளிய அருள்நெறி ஆகமத்தை நம்பிக்கையுடன் பின்பற்றி வழிபடுவதே விருப்பப்பயனை விரைவில் பெறத்தக்க செந்நெறியாகும். இக்காலத்தில் பெரும்பாலோர்க்கு சிறப்பு பூஜை முறைகளின் தத்துவப்பொருளோ பயன்களோ தெரியாமையால் ஈடுபாடும், ஆர்வமும் குன்றி உள்ளது. அவற்றின் தத்வார்த்தங்களை தெரிந்துகொண்டு அப்பூசைகளில் பங்கு கொள்வார்களேயானால் பெரிதும் பயனடைவர் என்பதால் இந்நூல் மக்களுக்கு மிகவும் நன்மைபயக்குமென்று நம்புகிறேன். இதனை நன்கு உணர்ந்த நூலாசிரியர் சிவஸ்ரீ. சிவானந்தகுருக்கள் இவ்வரிய நூலை "**சிவாகமங்களில் மாஸ பூஜா விதியும், விளக்கமும்**" என்ற பெயரில் எளிய இனிய நடையில் தொகுத்து எழுதியுள்ளார். இந்நூலில் சைவ ஆஸ்திகப் பெருமக்களுக்கு மிகவும் உதவக்கூடிய வகையில் பல ஆகமங்களின் சான்றுகளுடன் விளக்கி இருப்பது போற்றத்தக்கதாகும். மாஸ பூஜை செய்திகளைத்தாங்கி அவ்வப்பொழுது பல நூல்கள் வெளிவந்துள்ளபோதிலும் இந்நூலை தற்காலத் தேவைக்கேற்றார்போல் பலநூற்செய்திகளை ஒன்றாக திரட்டித் தொகுத்தும், பொருட்களை பட்டியலிட்டும் வரைபடத்துடன் காண்பித்து உள்ளங்கை திராக்ஷைக் கனிபோல் நூலாசிரியர் அளித்துள்ளது பாராட்டத்தக்கதாயுள்ளது. ஆறுபருவ காலத்திற்கும் ஏற்ற மண்டல வகை, மலர்வகைகளால் செய்யப்படுவதால் மாஸ பூஜை என்பது சிறப்பு பூஜைவகையைச் சார்ந்தது. இதனைக்குறைவின்றி செய்திட இதுபற்றிய ஞானமும் முயற்சியும் மிகவும் அவசியம். இப்பூசையை அர்ச்சகர் உதவியுடன் ஆலய ஆசாரியாரே செய்யவேண்டும். உரிய பொருட்களை நித்ய பூஜை யோடு இணைத்து உரிய காலத்திலேயே செய்து முடிக்கப்படவேண்டும். நித்ய பூஜைஹோமம் விழா இல்லாத போதிலும் இது வேள்வி மற்றும் விழாவுடன் செய்யத்தக்கது. தீக்ஷையைப் போன்று இப்பூசையின் மண்டலாகார சிவார்ச்சனையும், உரிய பொருளின் சிறப்பு அதிவாஸஸம்ஸ்காரங்களும், திருவிழாப்பொலிவும் தனிச்சிறப்பினை எடுத்துக்காட்டுவனவாகும். இப்பூசைக்குரிய பொருட்களை ஒரு ஆகமநூலின்படி சேமித்து பன்னிரு மாதத்திற்கும் பன்னிருவகையில் முடிவு செய்து இடைவிடாது மாஸபூஜையை செய்து வருவதென்பது அவ்வூர் மெய்யடியார்களின் சிரத்தாபக்தியை எடுத்துக்காட்டுவதாக விளங்கும். மேலும் இப்பூசையில் பல்கலைகளும் நிருத்தம், கீதம், வாத்யம், ராகமேளம், பண் இவைகள் அஞ்சலியாக சமர்ப்பிக்கப்படுவதால் நாட்டில் அக்கலைகள் பண்பாட்டு நாகரீக பாதுகாப்பு வளர்ச்சியுடன், மக்கள் சோகமற்று மகிழ்ச்சியோடு வாழ்வது திண்ணம். "**மானஸான்மண்டலம் சீரேஷ்டம்**" என்ற வசனப்படி மண்டல பூஜையின் மஹிமை அளப்பரியதாகும். எனவே மாஸ பூஜை தீக்ஷையைப் போன்றே நமக்கு சிவஞானத்தையும் சிவஸாயுஜ்யத்தையும் அளிக்க வல்லதாம். பன்னிரு மாஸ பூஜையின் பயனாக இஷ்ட காம்யார்த்தஸித்தி, ஸர்வகாரிய ஜயம், ருணத்ரய விமுக்தி, ஸர்வஸௌபாக்யம், புண்யநற்கதி, ஸாயுஜ்யம் முதலிய அனைத்தும் ஏற்படும் என ஆகமங்கள் கூறி வலியுறுத்துகின்றன. ஆகமங்கள் அங்கங்கு தனித்தனியே விளக்கிய செய்திகளனைத்தும் ஒருங்கே அமைந்த இந்நூல் சைவாகம இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டோருக்கும் வழிபாட்டு முறையில் ஆர்வம் கொண்டோருக்கும் மிக்க உதவியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இந்நூலைத் தொகுத்தவர் வெளியிட முன்வந்தோர், உதவியோர் யாவர்க்கும் எல்லா நலன்களையும் அருளவேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனை வணங்குகின்றேன். மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

சுபம்.

இங்ஙனம்

சென்னை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிப்புரை

आदिमध्यान्तनिर्मुक्तस्स्वभावविमलप्रभुः ।
सर्वज्ञः परिपूर्णश्च शिवो ज्ञेयः शिवागमे॥ (पौष्करे)

எல்லாம் வல்ல பரமபதியாகிய சிவபெருமானால் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருளப்பட்டவை சிவாகமங்கள். சிவாகமங்கள் சரியை, க்ரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பாதங்களை உடையது. உடலால் சிவபெருமானுக்கும் அவர்தம் அடியாருக்கும் தொண்டு செய்வது சரியை எனவும், உடலாலும் உள்ளத்தாலும் சிவபூஜைகளைச் செய்வது க்ரியை என்றும், உடல், உள்ளம், மூச்சினை முறையாக ஒரு நிலைப்படுத்தி சிவபெருமான் திருவடியில் நிலைபெறுவது யோகம் என்றும், இவைகளின் மூலம் ஆன்மாவானது அனுபவிக்கும் சிவானந்தமே ஞானம் என்றும் சொல்லப்படுகிறது.

அரும்பின்றி மலர் இல்லை, மலரின்றி காயும், காயின்றி கனியும், கனியின்றி சுவையும் இல்லை, அதுபோல் சரியை இன்றி க்ரியையும்; க்ரியை இன்றி யோகமும்; யோகமின்றி ஞானமும்; ஞானமின்றி முக்தியும் இல்லை. இவற்றுள் க்ரியா பாதம் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது நாம் யாவரும் அறிந்ததே.

க்ரியா பாதத்தில் நித்ய பூஜையுடன் நைமித்திகமாக ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி மற்றும் குறிப்பிட்ட நக்ஷத்திரத்தில் சிவபெருமானுக்கு செய்ய வேண்டிய சிறப்பான பூஜைகள் சொல்லப்பட்டுள்ளன. காமிகம் முதலான எல்லா ஆகமங்களிலும் மாஸ பூஜை குறிப்புகள் இருப்பினும் காமிகம், காரணம், சூக்ஷ்மம், அம்சுமத், சுப்ரபேதம், குமார தந்த்ரம் ஆகிய ஆகமங்களில் விரிவான குறிப்புகள் நமக்குக் கிடைத்துள்ளன.

இவைகளில் உத்தர காரணாகமத்தில் சற்று விளக்கமாகக் காணப்படுவதால் காரணாகமம் உத்தர பாகத்தை அடிப்படையாகக் கொண்டும், சில தேவையான இடங்களில் விளக்கம் மற்றும் மேற்கோள்கள் பிற ஆகமங்களிலிருந்தும் எடுத்தாளப்பட்டும் இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

மாஸபூஜையின் சிறப்புகள் மற்றும் இந்நூலின் தொகுப்பு

चैत्रे दमनकं प्रोक्तं वैशाखे गन्धपूजनम् ।
ज्येष्ठमासे फलैः पूजा क्षीरेणाषाढमासके ॥
श्रावणे शर्करापूजा अपूपैः प्रोष्ठपदेर्चना ।
अश्विन्यामन्नपूजा च कार्त्तिक्यां दीपरोहणम् ॥
घृतेन मार्गशीर्षे च क्षौद्रेण पुष्यमासके ।
घृतकम्बलकं माघे फाल्गुने दधिपूजनम् ॥ (कुमारतन्त्रे)

என்ற வகையில் ஒவ்வொரு மாதமும் ஒரு விசேஷமான த்ரவ்யத்தால் பெருமானை பூஜை செய்ய வேணுமாய் விதிக்கப்பட்டுள்ளது. இது தவிர ஒவ்வொரு மாதத்திற்கும் தனியாக மண்டலேச்வரர், குண்டம், விசேஷமான புஷ்பம், பத்ரம், யாகசமித்து, (விறகு) ஹோமத்திற்கான தான்யம், வஸ்த்ரம், ஆபரணம், கந்தம், பாத்ய-ஆசமன-அர்க்ய-பானீய த்ரவ்யங்கள், தூப - தீப த்ரவ்யங்கள், இசைக்கப்படும் ராகம், தாளம், பண், வாத்யம் மற்றும் நர்த்தன முறைகளும் பூஜையின் பலன்களும் நேர்த்தியாகச் சொல்லப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

" புண்ணியம் செய்தாற்கு பூவுண்டு நீருண்டு" என்ற வண்ணம் பூஜையில் புஷ்பங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மாஸபூஜைகளில் பல்வேறு வகை புஷ்பங்கள் சொல்லப்பட்டுள்ளன. அது சம்பந்தமாக ஆகமங்களில் "புஷ்ப விதி" பற்றிப் பார்க்க நேர்கையில், அதில் காணப்படும் பல புஷ்பங்களைப் பற்றி இன்றைய தலைமுறையாகிய நாம் அறிந்து கொள்ளவில்லை என்றே சொல்லலாம். எங்களால் இயன்றவரை மாஸபூஜைக்குச் சொல்லப்பட்டது மட்டுமின்றி வெவ்வேறு பூக்களின் பர்யாய பெயர்கள் மற்றும் படங்களை இணைத்துள்ளோம். ஆகையால் குருமுகமாகப் புஷ்பவிதியில் சொல்லப்பட்டுள்ள பல புஷ்பங்களைப் பற்றி நாம் அறிந்து கொள்வது அவச்யமாகிறது.

वासांसि सुविचित्राणि सारवन्ति मृदूनि च । शुद्धानि च शिवे दद्यात् विकेशानि नवानि च ॥

यावत्तद्वस्त्रतन्तूनां परिमाणं विधीयते । तावद्वर्षसहस्राणि शिवलोके महीयते ॥ (शिवधर्मे)

அழகான தோஷமற்ற வஸ்திரத்தை சிவபிரானுக்குச் சாற்றுவிப்பவர்கள் அவை எவ்வளவு நூல் கொண்டதோ அவ்வளவு காலம் சிவலோகத்தில் வாழ்வர்.

धूपो हरति पापानि दीपो मृत्युविनाशकः ॥ (कारणे)

என தூபம் பாபத்தையும் தீபம் அகால மரணத்தையும் போக்குவதாகும்.

यदपूपादिकं द्रव्यं भोज्यं दद्याच्छिवाय यः । वर्धते तस्य तद्धान्यं फलपुष्पादिकं तथा ॥

यावतस्तण्डुलां तत्र नैवेद्ये संप्रकल्पयेत् । तावद्वर्षसहस्राणि शिवलोके महीयते ॥(कारणे)

என வடை முதலிய போஜ்ய வஸ்துக்களையும், பழங்களையும், புஷ்பங்களையும் யார் சிவபிரானுக்கு அர்ப்பணிக்கிறானோ? அவனுக்கு அது தனமாக அதிகரிக்கும். நைவேத்யத்தில் எவ்வளவு அரிசிகள் உள்ளனவோ? அவ்வளவு வருடங்கள் சிவலோகத்தில் வாழ்கிறான்.

मद्दळं वै सुखं चैव ताळं शोकहरं भवेत् । पटहं पापहरणं भेरी पुष्टिविवर्धनी ॥

टक्का हर्षप्रदी चैव काहळी च सुखप्रदा। झल्लरी चेष्टकाम्यार्था कुम्भवाद्यं च मोक्षदम् ॥

नाडीसन्धानवाद्यं च कोटियज्ञफलं भवेत् । वैणवं सुषिरं गानं पुत्रपौत्रविवर्धनम् ॥

वाचाचर्मणि सन्धानवाद्यघोषो जयावहः । शङ्खध्वनिः सदाकामं सर्वशत्रुनिवारणः ॥

नृत्तवाद्यादिकं चैव आयुर्वर्धनमुत्तमम् । नटनाद्धान्यसिद्धिस्यात् शुद्धनृत्तं शुभप्रदम् ॥(कारणे)

என மத்தளம் சுகத்தைக்கொடுக்கும். தாளம் துக்கத்தைப் போக்கும். படஹம் பாபத்தை அகற்றும், பேரீ வாத்யம் புஷ்டியைக் கொடுக்கும். டக்கா வாத்யம் சந்தோஷமளிக்கும். காஹளீ வாத்யம் சௌக்யம் தரும். ஜல்லரீ வாத்யம் இஷ்டத்தைத் தரும், கும்பவாத்யம் மோக்ஷமளிக்கும். நாடீ வாத்யம் கோடியாக பலன் உண்டாக்கும். குழல் புத்திர பௌத்திரர்களைத்தரும், வாய்க்கத்து வாத்யம் ஜெயத்தைத்தரும். சங்கவாத்யம் சத்ருநாசம் செய்யும். நர்த்தன வாத்யம் ஆயுளைக்கொடுக்கும். நர்த்தனம் தான்ய வ்ருத்தியை கொடுக்கும். ராகம், கீதம், நர்த்தனம், வாத்யம் முதலியவை பற்றி இன்னும் விரிவான ஆராய்ச்சிகள் அவசியமாகிறது.

மாஸபூஜையில் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு மண்டலம் அமைத்து அதில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபிரானை ஆராதிக்க விதித்துள்ளது. ஒவ்வொரு மண்டலேச்வர ஆராதனையும் ஒரு விசேஷ பலனைத் தரவல்லது. "लयभोगाधिकारात्मा" என்று சிவபெருமான் வர்ணிக்கப்படுகிறார். யாகசாலையில் கும்பத்தில் போகாங்கமாகவும், அக்னியில் அதிகாராங்கமாகவும், மண்டலத்தில் லயாங்கமாகவும் விளங்கி அருள் புரிகிறார். பூஜைகளில் மண்டலேச்வரர் முக்கிய இடத்தைப் பெறுகிறார். இந்த வகையில் தற்பொழுது தீக்ஷை மற்றும் பவித்ரோத்ஸவம் தவிர மற்ற பூஜை, யாகங்களில் மண்டலேச்வராராதனம் குறைந்து விட்டது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். மாஸபூஜையில் குறிப்பிடப்படும் மண்டலங்கள் மட்டும் தகுந்த வர்ணங்களோடு பெரியோர்களின் வழிகாட்டுதலுடன் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இப்படி மாஸபூஜையின் ஒவ்வொரு அங்கமும் சிறப்பானதாகவும், எல்லையற்ற சிவபுண்ணியங்களை வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

இவற்றை உற்று நோக்கும் பொழுது ஐப்பசி மாதம் பௌர்ணமியில் செய்யப்படும் அன்னாபிஷேகம் என்னும் அன்னபூஜை மற்றும் கார்த்திகை மாத தீப பூஜை மட்டும் ஏறக்குறைய அனைத்து சிவாலயங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

மற்ற மாதங்களில் செய்யப்பட வேண்டிய சிறப்பான பூஜைகள் சில முக்கிய தலங்கள் தவிர மற்ற ஆலயங்களில் பல்வேறு காரணங்களால் அனுஷ்டிக்க முடிவதில்லை.

मासपूजां विनान्यैश्च पूजनैर्निष्फलं भवेत् ।
न कुर्याच्चेत्तु मोहेन सर्वदोषकरं भवेत् ॥

மாஸபூஜை இல்லாமல் மற்ற விசேஷ பூஜைகள் செய்வதால் பலன் இல்லை எனவும், வாய்ப்புகள் இருந்தும் மோகத்தினால் மாஸபூஜையைச் செய்யாது விட்டால், தோஷமாய் முடியும் என்ற மேற்கண்ட குமாரதந்த்ர வாக்யத்தின் மூலம் மாஸபூஜையின் அவச்யத்தை உணரலாம்.

திருஞானசம்பந்தப்பெருமானது இரண்டாம் திருமுறை

திருமயிலை- பூம்பாவைத் திருப்பதிகத்தில்

"அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்" (புரட்டாசி அபூப பூஜை)

"விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்" (கார்த்திகை தீப பூஜை)

"ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்" (மார்கழி நெய் பூஜை)

"தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்" (தை தேன் பூஜை)

"நெய்பூசும் ஒண்புழுக்கல் கொண்டாடும்" (மாசி நெய் கம்பள பூஜை)

"பங்குனியுத்திரநாள் ஒலிவிழாக்காணாதே போதியோ பூம்பாவாய்" (பங்குனி தயிர் பூஜை)

"பொற்றாப்பு காணாதே போதியோ பூம்பாவாய்" (வைகாசியில் தங்கத்தை சந்தனத்துடன் அரைத்து சாத்தும் சுந்த பூஜை) பற்றிய குறிப்புகள் மாஸபூஜையின் சிறப்பையும் அந்த தினங்களில் ஸ்வாமி தரிசனம் செய்யவேண்டுவதின் அவசியத்தையும் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாஸபூஜையைச் செய்ய முற்படுபவர்கள் எளிதாகப் புரிந்து கொண்டு சிறப்பாகச் செய்யும் வண்ணம் தெளிவான விளக்கங்களுடன் , பூஜாங்க த்ரவ்யங்களின் ஸம்ஸ்க்ருத பெயர்களுக்கு தமிழில் பொருள் விளக்கமும், சந்தேஹத்திற்கான சில கேள்வி பதில் பகுதியும் சேர்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சிவபெருமானிடத்தில் உள்ளன்பு மிக்கவர்கள் மாஸபூஜையைச் சிறப்பாகச் செய்ய முற்படுவார்கள் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

படிப்பதோடுமட்டுமல்லாது அவற்றைப் புரிந்து கொண்டு பல சிரமங்களுக்கு இடையிலும் சொல்லப்பட்ட பூஜை பொருள்கள் ஒவ்வொன்றையும் இயன்ற அளவு முறையாகச் சேகரித்து அவற்றை பெருமானுக்கு அர்ப்பணித்துச் செய்யும் போது ஏற்படும் ஆத்மத்ருப்தி, சில நேரங்களில் அவற்றில் பெருமானின் சிறு சிறு திருவிளையாடல்களால் அவர்தம் பெருங்கருணையை நமக்கும் உணர்த்தும் தன்மைகளையும், பெருமான் திருவடிகளில் ஓர் உள்ளன்பு உண்டாவதையும் விவரிக்க இயலாது, அனுபவித்துப் பார்த்தால் மட்டுமே தெரியும், என்பதே உண்மை.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ ! காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரோ" என்ற தேவாரத்திற்கு இணங்க, மாஸபூஜையின் விளக்கங்களைக் கொண்ட இந்த புத்தகத்தை வெளியிடுவது பற்றி ஆரம்பித்தது முதல் எங்கள் செயல்கள் அனைத்தும் அருணாசலப்பெருமான் பெருங்கருணைத் தன்னருளால் மட்டுமே நிகழ்ந்து வருவதைச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

பரமனது திருவருளால் பலரும் முயற்சியுடன் மாஸபூஜைகளைச் செய்யும் போது தான் இந்த வெளியீடு நிறைவு பெறும். இவ்வண்ணம் 12 மாதபூஜைகளைச் சிவபெருமானுக்குச் செய்பவரும், செய்விப்பவரும், 12 சூத்திரங்களைக் கொண்ட சிவஞானபோதத்தின் சித்தாந்த முடிவாகிய அடிமுடி காணாது அனலுருவாய் நின்ற ஸ்ரீமத் அருணாசலேசப் பெருமான் திருவடியில் தேஹாந்தத்தில் ஸாயுஜ்யம் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

நமது சங்கத்தின் சார்பாக இன்னும் பல சிவாகம நூல்கள் வெளிவர வேண்டும் என்று, எங்கள் ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீமத் அருணாசலப்பெருமான் திருவருளையும், குருவருளையும் சிந்திக்கலானோம்... நமஸ்காரங்களுடன்..

சிவஸ்ரீ S.ஆனந்த ஈசாநசிவம்
ஆசிரியர், சிவஞானாலயம், (வேதாகம பாடசாலை)
1, கிழக்கு மடவிளாகம், கடம்பர்கோவில்,
குளித்தலை- 639104

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

நன்றியுரை

ஸ்ரீ சோணாத்ரி நாதாய நம:சிவாய :-

ஸ்ரீ குருப்யோ நம:-

எல்லாம் வல்ல ஸ்ரீ பரமேஸ்வரரின் அனுக்கிரஹத்தால் உலகில் உள்ள உயிர்கள் இறைவனை அடையும் பொருட்டு சிவாகமங்கள் சிவ பெருமானால் அருளப் பெற்றது. சிவாகமங்கள் சரியை, க்ரியை, ஞானம், யோகம் என்று நான்கு பாதங்களாக அமையப்பெற்றது.

க்ரியா பாதத்தில் சிவபெருமான் பலவிதமான பூஜை முறைகளை அருளிச் செய்துள்ளார். இவ்வாறான பலவிதமான பூஜை முறைகளினால், உலகில் உள்ள ஆன்மாக்கள் சிவபெருமானின் பாத கமலங்களை அடைவதற்கு பலமுறைகள், பல வழிகள் உள்ளன. அவைகளில் ஒன்றான பரார்த்த பூஜைகளில் மாதந்தோறும் வருகின்ற பௌர்ணமி அன்று செய்யக்கூடிய மாஸ பூஜையானது, அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் பல ஆகமங்களில் உள்ள மாஸ பூஜையை ஒன்றாக திரட்டியும் (சிவாகமங்களில் மாஸ பூஜை விதியும் விளக்கமும்) ஒவ்வொரு மாஸ பூஜைக்கு உரிய பாத்யம், ஆசமனம், அர்க்யம், ஸ்நானம், வஸ்த்ரம், சந்தனம், ஆபரணம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், இந்தநம், சமித்து, முக்காலி, ஆஹுதீ, ஜபம், பாநீயம், மண்டலம் வரை 18,26 த்ரவ்யங்களை தனித்தனியாக ஒவ்வொரு மாதத்திற்கும் கூறப்பட்டுள்ளதைத் தொகுத்தும், மேலும் அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் சில புஷ்பங்களின் வண்ணப்படங்களையும், உதக த்ரவ்யங்களையும் சில மண்டலங்களின் வரைபடமும் தொகுத்து, மாஸ பூஜை என்ற இந்த புத்தகத்தை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வாறான மாஸ பூஜையை நாங்கள் படிக்கும் காலங்களில், எங்கள் குருநாதர், பாடசாலைக்கு அருகில் உள்ள சுரைக்குடி ஸ்ரீ சோமகலாவள்ளி ஸமேத ஸ்ரீ சோமநாதஸ்வாமி சிவாலயத்தில் செய்வதை அடிப்படையாகக் கொண்டு இந்த புத்தகத்தைத் தொகுப்பதற்கு மூல காரணமாக அமைந்தது. மேலும், இந்த மாஸ பூஜையில் எங்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்து, அதன் மூலம் சிறந்த வழிகாட்டுதலையும் அறிய முற்படும் போது, மயிலை ஸ்ரீ கற்பகாம்பாள் ஸமேத ஸ்ரீ கபாலீஸ்வரர் ஆலயத்தில் இந்த மாஸ பூஜை நடைபெறுவது அறிந்தோம். அதில் உள்ள மண்டலம், முக்காலி போன்ற விஷயங்களையும் **சிவஸ்ரீ கபாலி வைத்தியநாத குருக்கள்** அவர்கள் மூலமாக மேலும் சிலவற்றையும் தெரிந்து கொண்டோம். இந்த மாஸ பூஜையில் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு மண்டலமானது கூறப்பட்டுள்ளது. அவைகளை ஐ.எப்.பி. என்கின்ற முக்த போதா (பாண்டிச்சேரி இன்ஸ்ட்டிடியூட்) என்ற வலைதளத்தில் அம்சுமதாகமும், மண்டலத்திற்கான ஸ்லோகங்கள் (TN 26) என்ற தலைப்பில் கிடைக்கப்பெற்றது. அந்த ஸ்லோகங்களை, மண்டல ஸ்லோகத்தினை உருவமாக வரைவதற்கு ஆசிரியராக இருந்து வழிநடத்திய சித்தூர் **சிவஸ்ரீ. ஞானசம்பந்த சிவாச்சாரியர்** அவர்களுக்கும், சென்னை **சிவஸ்ரீ சோமசேகர சிவாச்சாரியர்** அவர்களுக்கும்,

பாண்டிச்சேரி ஃப்ரெஞ்ச் இன்ஸ்டிடியூட் **டாக்டர் திரு.டி.கணேசன்** அவர்களுக்கும், பாண்டிச்சேரி ஃப்ரெஞ்ச் இன்ஸ்டிடியூட் **சிவஸ்ரீ திருக்குமரன்** அவர்களுக்கும் இந்த புத்தக தொகுப்பில் மேலும் பல விஷயங்களை தெரிந்து கொள்ள எங்களுக்கு பல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆலோசனைகளையும், பல புத்தகங்களையும் வழங்கி உதவிய திருப்பரங்குன்றம் **சிவஸ்ரீ கார்த்திகேய குருக்கள்** அவர்களுக்கும், இந்த புத்தகத்தில் வருகின்ற அனைத்து விஷயங்களையும் தமிழ் விளக்கம் போன்ற அனைத்து வித உதவிகளையும் செய்த கடம்பர் கோயில் **ஸ்ரீ ஆனந்த சிவம்** அவர்களுக்கும், பெங்களூர் **சபரிகிரீச சிவம்** அவர்களுக்கும், இந்த புத்தகம் வெளிவர உதவியாக இருந்த சகாக்கள் ராம்குமார்சிவம், செந்தில்சிவம், திருவண்ணாமலை **சிவஸ்ரீ சுகுமார் சிவாச்சாரியர்**, தண்டபாணி சர்மா, குருமூர்த்தி சிவம், கிரிசிவம், திருமுல்லைவாயில் பாலாஜி சிவம் ஸ்வஸ்திக் சிவம் போன்றவர்களுக்கும், கணினி மூலமாக உதவி செய்த திரு.சம்பந்தமூர்த்தி, திரு.வாசுதேவன் அவர்களுக்கும் மேலும் இந்த புத்தகம் வெளிவர உதவியாக இருந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த புத்தகத்திற்கு ஆதாரமாக இருந்த அனைத்து புத்தகங்களை வெளியிட்டவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும், இந்த புத்தகத்தில் ஏதேனும் தவறுகள் இருந்தால் அதை மன்னித்து, எங்களுக்கு தெரிவித்தால் அடுத்த பதிவுகளில் திருத்தி வெளியிட உபயோகமாக இருக்கும் என கேட்டுக் கொள்கிறோம். மேலும் இந்த புத்தகத்தில் வருகின்ற மண்டலங்களை பற்றிய ஆராய்ச்சிகள் தேவைப்படுகிறது.

இந்த மண்டலத்தை ப்ரயோகம் செய்யும் பொருட்டு தகுந்த ஆசானை அணுகி முறையாக தெளிவு பெற்று ப்ரயோகம் செய்யவும், மேலும் இந்த புத்தகத்திற்காக புஷ்பார்ச்சனை விதியைப் பற்றிக் கட்டுரையாக வழங்கிய திருநள்ளாறு **சிவஸ்ரீ. கோடீஸ்வர சிவாச்சாரியர்** அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். இப்புத்தகத்திற்கு அட்டைப் படம் வரைந்து கொடுத்த காஞ்சிபுரம் சிற்பி ஸ்ரீதனுசு என்கின்ற செந்தில் அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்புத்தம் வெளிவர பெருமுயற்சி செய்த **சிவஸ்ரீ *B*. ரவிச்சந்திர குருக்கள்,** திருவண்ணாமலை அவர்களுக்கும், இப்புத்தகம் வெளிவர பெரும் உதவி புரிந்த உரிமையாளர்கள் **குப்தா பிரிண்டர்ஸ்,** சிவகாசி, **திரு. *V*. இராஜசேகரன், ஆடிட்டர்,** சிவகாசி, **திரு. காசிராஜன் & சன்ஸ்,** சிவகாசி **திரு. *A.A*. மகேசன்,** இணைப் பேராசிரியர், சிவகாசி, உரிமையாளர்கள் **கணேஷ் கட்டிங் ஒர்க்ஸ்,** சிவகாசி, உரிமையாளர்கள் **சில்வர் பயர் ஒர்க்ஸ் பேக்டரி,** சிவகாசி, அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்து எல்லாம் வல்ல அருணாசலேஸ்வரர் அனைத்து நலன்களையும் வளங்களையும் அருள வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
சிவஸ்ரீ *K*. சிவானந்த சிவம்,
அருள்மிகு அருணாசலேஸ்வரர் தேவஸ்தானம்,
திருவண்ணாமலை.

நன்றி, சுபமஸ்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாஸ பூஜை வினா விடை

*** மாஸபூஜை என்பது என்ன?**

சிவாகமங்களில் மாஸநக்ஷத்திரங்கள் என்று ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு நக்ஷத்திரம் என்று பன்னிரண்டு மாதங்களுக்கும் உள்ளன. அவைகளிலோ பௌர்ணமி திதிகளிலோ சிவபெருமானுக்கு ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட ஒரு த்ரவ்யம் கொண்டு விசேஷமான பூஜைகள் சொல்லப்பட்டுள்ளன. அதுவே மாஸபூஜை எனப்படும்.

*** மாஸநக்ஷத்திரம் என்பவை எவை ?**

சித்திரை முதலான மாதங்களில் சுக்லபக்ஷத்தில் முறையே சித்திரை, விசாகம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, அச்வினீ, க்ருத்திகை, திருவாதிரை, பூசம் அல்லது புனர்பூசம் , மகம், உத்திரம் ஆகிய நக்ஷத்திரங்கள் பெரும்பாலும் பௌர்ணமியுடன் கூடி வரும். பௌர்ணமி சேர்ந்து வந்தாலும் சேராமல் வந்தாலும் மேற்கண்டவைகள் மாஸ நக்ஷத்திரங்கள் எனப்படும்.

चन्द्रज्ञानागमे :–

चित्रा विशाखा मूलं च चौत्रराषाढमेव च ।
श्रविष्ठा प्रोष्ठपाश्विन्यः कृत्तिकार्द्रा पुनर्वसू ॥
मघा चौत्तरनक्षत्रं मेषादि द्वादशस्वपि ॥

*** மாஸ நக்ஷத்திரங்களிலோ பௌர்ணமியிலோ தான் மாஸ பூஜை செய்ய வேண்டுமா?**

மாஸ நக்ஷத்திரங்களிலோ, அரசன் அல்லது கர்த்தாவிற்கு உகந்த அல்லது ஜென்ம நக்ஷத்திரத்திலோ, யுத்த ஆரம்பம் அல்லது முடிவிலோ ,திருவாதிரை நக்ஷத்திரத்திலோ, அயன, விஷு புண்ய காலங்களிலோ, மாஸப்பிறப்புகளிலோ, அமாவாஸ்யை, பௌர்ணமி தினங்களிலோ , சூர்ய-சந்த்ரக்ரஹண தினங்களிலோ, வ்யதீபாத யோக தினத்திலோ கூட அந்தந்த மாதத்திற்குச் சொல்லப்பட்ட த்ரவ்யங்களால் சிவபெருமானுக்கு மாஸபூஜையைச் செய்யலாம் என்று சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

अंशुमति :-

तत्तन्मासर्क्षके कुर्यान्नृपाणां जन्मऋक्षके ।
कर्तुर्जन्मदिनेवापि चार्द्रायां जन्ममासके ॥
अयने विषुवे चैव ग्रहणे चन्द्रसूर्ययोः ।
पर्वद्वये च सङ्क्रान्तौ व्यतीपाते दिवाकर ।
अयनाद्युक्त कालेषु तन्मासद्रव्यकैर्यजेत् ॥

सूक्ष्मे :-

युद्धारम्भावसाने तु ह्ययने विषुवे तथा ।
कर्तुर्जन्मानुकूलर्क्षे मासर्क्षे चाथवा पुनः ॥
पुण्यकाले विशेषेण मासपूजां प्रकल्पयेत् ॥

*** இரு வகை மாஸங்கள் யாவை ? அதன் விளக்கம் என்ன ?**

சூரியனை அடிப்படையாகக் கொண்ட சௌரமானத்தில் மாஸங்கள் இருவகைப்படும். அவை ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என்பனவாகும்.

अंशुमति :-

मासं द्विविधमाख्यातं स्थूलं सूक्ष्मं दिवाकर ।
मार्गशीर्षकमासादि स्थूलमित्यभिधीयते ॥
मेषादि मीनपर्यन्तं सूक्ष्ममेवं प्रकीर्तितम् ।
तैष्यादिमार्गपर्यन्तं केचित् पक्षं दिवाकर ॥

सूक्ष्मागमे :-

अथातः संप्रवक्ष्यामि मासपूजाविधिं परम् ।
मासं द्विविधमाख्यातं स्थूलं सूक्ष्ममिति स्मृतम् ॥
स्थूलं वै चापमासादि वृश्चिकान्तमिति स्मृतम् ।
उदयाद्युदयान्तञ्च यल्लग्नं परिवर्तते ॥
तत् सूक्ष्ममिति विज्ञेयं सूक्ष्ममासं प्रभञ्जन ॥

மார்கழி முதலாக கார்த்திகை வரை கணக்கிடப்படுவது ஸ்தூலம் என்பதாகும். (தை முதல் மார்கழி வரை கணக்கிடப்படுவதும் ஸ்தூலம் என்று சில நேரங்களில் குறிப்பிடப்படுவதாக அம்சுமதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்திரை முதல் பங்குனி வரை கணக்கிடப்படுவது ஸௌக்ஷ்மம் என்று சொல்லப்படும். ஸௌக்ஷ்மமாஸம் ஒரு தினத்தின் சூர்ய உதயத்திலிருக்கும் லக்னத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

*** இருவகை மாதங்களில் எதன் ப்ரகாரம் மாஸபூஜை செய்ய வேண்டும் ?**

अंशुमति :-

सर्वं स्थूलेन कर्तव्यं स्थूलकालविधिं श्रुणु ॥

सूक्ष्मागमे :-

स्थूले वा सूक्ष्ममासे वा मासपूजा विधीयते ॥

அம்சுமதாகமம் ஸ்தூலமாஸத்திலேயே மாஸபூஜைகளைச் செய்ய வேண்டும் என விதிக்கிறது. ஸௌக்ஷ்மாகமத்தில் ஸ்தூல மாஸத்திலோ அல்லது ஸௌக்ஷ்ம மாஸத்திலோ மாஸபூஜையைச் செய்யலாம் என விதிக்கிறது. இந்த விஷயத்தில் தேசாசாரங்களை அனுசரித்து, சான்றோர்களின் வழிகாட்டுதலைக் கொண்டு செய்ய அறிவுறுத்தப்படுகிறது

*** ஒரு மாஸத்தில் இரண்டு நக்ஷத்திரங்கள் வருமாயின் எப்பொழுது மாஸபூஜையைச் செய்ய வேண்டும்?**

ஒரு மாதத்தில் இரண்டு முறை நக்ஷத்திரம் வருமாயின் வைகாசி, புரட்டாசி, தை ஆகிய மாதங்களில் மட்டும் இரு முறையும் மாஸபூஜையைச் செய்ய வேண்டும். அதற்கு அந்தந்த மாஸபூஜை படலங்களில் ப்ரமாணம் சொல்லப்பட்டுள்ளது வருமாறு....

उत्तरकारणे:-

वैशखमास-गन्धपूजा पटले:-

एकमासे द्विनक्षत्रे मासपूजाद्वयं चरेत् ॥

आश्वियुजमास-अन्नपूजा पटले :-

एकमासे द्विनक्षत्रे पूजयेत्तु द्वयोरपि ॥

पुष्यमास मधुपूजा पटले :-

एकमासे द्विनक्षत्रे द्विऋक्षे पूजयेच्छिवम् ॥

ஒரு மாதத்தில் இரண்டு நக்ஷத்திரம் வருமாயின் கடைசியில் வரும் இரண்டாம் நக்ஷத்திரத்தில் தான் மாஸ பூஜை செய்யவேண்டும் என்று சில மாதங்களுக்கு **வகுக்கப்பட்டுள்ளது**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उत्तरकारणे:-

ज्येष्ठमास-फलपूजा पटले:-

एकमासे द्विनक्षत्रे अन्त्यर्क्षे पूजयेच्छिवम् ॥

சித்திரை,ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை மார்கழி, மாசி, பங்குனி ஆகிய எட்டு மாதங்களில் முதல் கடைசி என இரு முறையும் பௌர்ணமியுடன் கூடிய நக்ஷத்திரம் வரின் விசேஷம். பௌர்ணமி இல்லாமல் நக்ஷத்திரம் மட்டும் சில முறை வருவதுண்டு. அப்பொழுது ஐப்பசி மாத அன்னாபிஷேகம் மற்றும் கார்த்திகை தீபம் இரண்டிற்கும் சிறப்பு விதி கூறப்பட்டுள்ளது.

ऋक्षयुक्तमयुक्तं वा दीपं पर्वणि कारयेत् ॥

என்பதால் கார்த்திகை தீபத்திற்கு திதி முக்கியம் என்று வரையறுக்கப் பட்டுள்ளது.

पर्वयुक्तमयुक्तं वा आश्विजामन्नपूजनम् ॥

என்று வருவதால் அச்வினி நக்ஷத்திரம் என்று உள்ளதோ அன்றே அன்னாபிஷேகம் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஐப்பசி கார்த்திகையை தவிர மற்றைய சித்திரை, ஆடி, ஆவணி, மார்கழி, மாசி, பங்குனி ஆகிய மாதங்களில் முதல் இறுதி என்று இரு முறை நக்ஷத்திரம் வரின்

तिथिनक्षत्रवाराणां तथैरेव बलीयसि ॥

என்ற வாக்கியத்தின் படி பௌர்ணமியோடு கூடிய நக்ஷத்திரம் உத்தமம் , சேராமல் போனாலும் பௌர்ணமியன்றே மாஸபூஜையைச் செய்யவேண்டும். (அன்னாபிஷேகம் மட்டும் நக்ஷத்திரம் முக்கியம்), பௌர்ணமியுடன் அச்வினி வராவிட்டாலும் எந்த தினத்தில் மாலை அல்லது ப்ரதோஷ வேளையில் அச்வினி உள்ளதோ அன்றே அன்னாபிஷேகம் செய்ய வேண்டும்). மேற்கண்ட விஷயங்களில் க்ஷேத்ர ஆசாரங்களை உரிய சான்றோர்களிடம் கேட்டு, அனுசரித்துச் செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

*** மாஸபூஜையின் அங்கங்கள் யாவை?**

பாத்யம், ஆசமனம், அர்க்யம், ஸ்னானம், வஸ்த்ரம், கந்தலேபனம், ஆபரணம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், வ்யஞ்ஜனம், பானீயம் ,முகவாஸம், ராகம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கீதம், ந்ருத்தம், தாளம், வாத்யம், மந்த்ரம், பத்ரம், மண்டலம், குண்டம் , தான்யம், சமித்து, விறகு, ஜபஹோமம் ஆகியவை மாஸபூஜையின் அங்கங்களாகும்.

अंशुमति :-

पाद्यमाचमनं चार्घ्यं स्नानं वासश्च चन्दनम् । भूषणं पुष्पकं चैव धूपदीपं निवेद्यकम् ॥
व्यञ्जनं चैव पानीयं मुखवासं तथैव च । रागं गीतं च नृत्तं च तालं वाद्यक्रमं तथा ॥
मन्त्रं पत्रविधानं च मण्डलं कुण्डमेव च । विश्वधान्यश्च समिधो होमश्चैव जपस्तथा ।
द्रव्याण्येतानि सर्वाणि वक्ष्ये हन्तु पृथक्पृथक् ॥

*** மாஸபூஜையின் ப்ரதான த்ரவ்யத்தை என்ன செய்ய வேண்டும் ?**

மாஸபூஜையின் ப்ரதான த்ரவ்யத்தை சுவாமியின் மீது அபிஷேகமாக அல்லது அலங்காரமாகவும் செய்யலாம். அன்னாபிஷேகத்தினை அலங்காரமாகச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. தேன்,நெய், தயிர் முதலியவற்றை அபிஷேகமாக மட்டுமே செய்யமுடியும்.

*** அன்னபூஜையின் தனிச்சிறப்பு என்ன ?**

அன்னாபிஷேகத்தில் ஸ்வாமியின் மேல் சாற்றப்படும் அன்னம் ஒவ்வொன்றும் ஒரு லிங்கமாகச் சொல்லப்படுகிறது. அன்னாபிஷேகம் மலம் நீங்கி தூய்மையான பக்குவப்பட்ட ஆன்மாக்கள் சிவபெருமானைச் சார்ந்து அவரது வண்ணமாக ஆதலைக் குறிக்கின்றது.

*** மாஸபூஜையை ஒரு நாளின் எந்த பூஜா காலத்தில் செய்தல் வேண்டும் ?**

மாஸபூஜையை திதி, நக்ஷத்திரங்களைக் கணக்கில் கொண்டு உச்சிகாலம் அல்லது சாயரக்ஷை பூஜையில் செய்யலாம். இந்த விஷயத்தில் தேசாசாரங்களை அனுசரித்து, சான்றோர்களின் வழிகாட்டுதலைக் கொண்டு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

*** மாஸ பூஜை எந்தெந்த தேவர்களுக்குச் செய்யலாம்?**

பொதுவாக மாஸபூஜை சிவபெருமானுக்கே சொல்லப்பட்டிருந்தாலும் சிவாலயத்திலுள்ள அம்பிகைக்கும், தனி ஆலயங்களில் விநாயகர், சுப்ரஹ்மண்யர், மாஹேச்வரமூர்த்தங்கள் ப்ரதானமாக இருந்தால் அவர்களுக்கு மட்டும் செய்யலாம்.

(குறிப்பு :- குமாரதந்த்ரம்,ஸூக்ஷ்மம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

चैत्रमास ध्वजपूजा पट प्रारम्भः

अथातः संप्रवक्ष्यामि ध्वजपूजाविधिक्रमम् ।
ध्वजं श्रीकरमेवोक्तं सर्वसंपत्करं शुभम् ॥1
पूर्वपश्चिमशालाग्रे नवाष्टदशहस्तयोः ।
पञ्चहस्तप्रमाणं वा दण्डपञ्चतरं शुभम् ॥ 2
वेदिकायां तु चैव दर्पणोदरसन्निभम् ।
विस्तारेणोन्नतं विद्यात् तस्य पूर्वे तु कर्णमुच्यते ॥ 3
षडश्रं कर्णकाग्रे तु मणिमाणिक्यभूषितम् ।
पञ्चवर्णोज्ज्वलद्दिव्यं रत्नपट्टं प्रसारयेत् ॥ 4
दण्डं पट्टसमं पूर्ववत् परिकल्पयेत् ।
ईशान्ये वेदिकायां तु शङ्खं संस्थाप्य तत्ततः ॥ 5
पूर्वोक्तविधिनावाह्य पूजयेत्तु विशेषतः ।
दण्डमूलं सदाभ्यर्च्य पाद्याचमनार्घ्यकम् ॥ 6
पूर्वोक्तविधिना कल्प्य कर्णं वै दण्डके न्यसेत् ।
पाद्यादीनि विशेषेण कुर्याच्चैव ततः परम् ॥ 7
तत्र दण्डस्य न्यस्य चार्घ्यादीन्येव ततः परम् ।
कर्णं दण्डे न्यस्य पूर्ववच्चार्घ्यमुच्यते ॥ 8
नित्यपूजाभिषेकान्ते नैवेद्यं च समाचरेत् ।
चित्रवर्णाकृतिं वस्त्रं वक्त्राभावं प्रकीर्तितम् ॥ 9
चन्दनं समाहृत्य चन्दनेनैव लेपयेत् ।
धूपयेद् दीपदीपैश्च पञ्चनामावलीक्षणम् ॥10
धारयेद्विधिवच्चैव कर्पूरं च ततः परम् ।
विशेषाभिषेकं च दत्त्वा कर्पूरदीपकम् ॥11
पत्रं वा शीघ्रमेव नैवेद्यं च ततः परम् ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌹𑌰𑌿𑌦𑍍𑌰𑌾𑌭𑌂 𑌪𑍍𑌰𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌬𑍃𑌹𑌤𑍀𑌪𑌾𑌰𑌶𑍁𑌙𑍍𑌗𑌯𑌾 ॥ 12

𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌨𑌂 𑌪𑍁𑌪𑍂𑌪𑌕𑍍𑌷𑍁𑌕𑌾 𑌪𑌾𑌨𑍀𑌯𑌞𑍍𑌚 𑌤𑌤𑍍𑌸𑍂𑌰𑍍𑌣𑌂 ।

𑌸𑌿𑌨𑍍𑌦𑍂𑌰𑌮𑌾𑌦𑌿𑌨𑍀𑌰𑌾𑌜𑍍𑌯 𑌪𑌨𑍍𑌨𑌕𑌾𑌪𑌟𑌗𑌨𑍍𑌧𑌤𑌃 ॥ 13

𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌜𑌾𑌤𑍀𑌫𑌲𑌾𑌭𑌾𑌸𑌂 𑌪𑌦𑍍𑌮𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌶𑍁𑌚𑌿𑌸𑍍𑌮𑌿𑌤𑌾 ।

𑌉𑌶𑍀𑌰𑌞𑍍𑌚𑌵 𑌹𑍍𑌰𑍀𑌬𑍇𑌰𑌂 𑌮𑍁𑌰𑌞𑍍𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌿𑌯𑌙𑍍𑌗𑌵𑌃 ॥ 14

𑌪𑌾𑌨𑍀𑌯𑌮𑌿𑌤𑌿 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌧𑍂𑌪𑌞𑍍𑌚𑍈𑌵 𑌤𑌤𑍍𑌸𑍂𑌰𑍍𑌣𑌂 ।

𑌰𑌾𑌮𑌠𑍍𑌯𑌂 𑌨𑍍𑌯𑌸𑍇𑌦𑍍𑌭𑌾𑌗𑍍𑌯 𑌧𑍂𑌪𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ॥ 15

𑌪𑍁𑌷𑍍𑌪𑌦𑍀𑌪𑌾𑌕𑍃𑌤𑌿𑌞𑍍𑌚𑍈𑌵 𑌚𑌿𑌶𑌤𑌂 𑌸𑌜𑍍𑌯𑌯𑌾 𑌕𑍃𑌤𑌾𑌤𑍍 ।

𑌕𑌸𑍍𑌤𑍂𑌰𑌿𑌸𑌹𑌿𑌤𑌞𑍍𑌚𑍈𑌵 𑌦𑍀𑌪𑌪𑌾𑌸𑌂 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ॥ 16

𑌸𑌹𑌸𑍍𑌰𑌸𑌜𑍍𑌯𑌯𑌾𑌦𑌾𑌙𑌂 𑌶𑍍𑌰𑍀𑌖𑌂𑌡𑌂 𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑍁𑌚𑌿𑌭𑍂𑌪𑌤𑌃 ।

𑌤𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌤𑌦𑌗𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌸𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌭𑍁𑌤𑌿𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ 17

𑌪𑌰𑌿𑌚𑌾𑌰𑌕𑌦𑌾𑌹𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑍇 𑌦𑌤𑍍𑌵𑌾 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।

𑌤𑌦𑍍𑌯𑍁𑌗𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑍍𑌦𑌾𑌯𑌾𑌙𑌂 𑌪𑍍𑌰𑌾𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍍𑌯𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌵𑌾 ॥ 18

𑌶𑌂𑌖𑍋𑌚𑍍𑌛 𑌦𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌨𑍈𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌧𑍂𑌪𑌦𑍀𑌪𑌕𑌃 ।

𑌰𑌾𑌮𑌂 𑌶𑍍𑌰𑍀𑌕𑌾𑌮𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌮𑍀𑌤𑍇𑌶𑌿𑌕𑌦𑍁𑌰𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑍇 ॥ 19

𑌚𑌣𑍍𑌡𑍀𑌲𑌾𑌪𑍍𑌯𑌾𑌤𑌾𑌲𑌞𑍍𑌚 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌯𑌞𑍍𑌚 𑌨𑌰𑌸𑍍𑌤𑌤𑌃 ।

𑌪𑌾𑌦𑍍𑌯𑌂 𑌦𑌰𑍍𑌦𑌶𑍍𑌯𑌤𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌨𑌰𑌸𑍍𑌤𑌮𑍀𑌤𑍇𑌸𑍍𑌦𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ 20

𑌸𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌂 𑌭𑌮𑌪𑍍𑌯𑌾𑌕𑌾 𑌸𑌪𑍂𑌸𑌳𑌾𑌮𑍍𑌯𑌸𑌂 𑌪𑌦𑌃 ।

𑌯𑌾𑌮𑌾𑌗𑍍𑌰𑌾𑌦𑍇 𑌦𑍍𑌯𑍇𑌦𑌾𑌙𑌂 𑌚𑌣𑍍𑌡𑌶𑌾𑌯 𑌪𑍍𑌰𑌦𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ 21

𑌏𑌵𑌂 𑌯𑍈 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌿𑌜𑌯𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ।

𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑍀 𑌲𑌭𑌤𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌕𑌾𑌮𑌾𑌰𑍍𑌥𑍀 𑌧𑌨𑌲𑌾𑌭𑌭𑌾𑌗𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ 22

𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑍀 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌶𑌿𑌵 𑌏𑌵 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ।

𑌇𑌤𑌿 𑌚𑍈𑌤𑍍𑌰𑌮𑌾𑌸𑌦𑌮𑌨𑌪𑍂𑌜𑌾 𑌪𑌟𑌲𑌃

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவமயம்

சித்திரை மாத தமன பூஜை

சித்திரை மாதத்தில் சிவபெருமானுக்கு "தமன பூஜை" என்னும் மரிக்கொழுந்து சாற்றும் பூஜை சிறப்பாகக் கூறப்படுகிறது. இது லக்ஷ்மீகடாக்ஷத்தையும், சம்பத்தையும் தரவல்லது ,என்று ஆகமங்களில் குறிப்பிடுகின்றன.

தமன பூஜையின் காரணம்:-

சிவபெருமானது கோபத்திலிருந்து "தமனன்" என்ற பைரவர் தோன்றினார். அவனால் எல்லா தேவர்களும், அசுரர்களும் பயந்து தன்னடக்கம் உள்ளவர்களாக மாறினர். மகிழ்ந்த சிவபெருமான் பைரவரை பூமியில் தனது பூஜைக்கு உரிய மரிக்கொழுந்தாக மாற்றி அருளினார்.

அதனை முறையாகச் சித்திரை மாதத்தில் சாற்றுபவர்கள் தனது பரிபூரண திருவருள் பெற்றவர்களாக ஆவார்கள் என்று காமிகாகமத்தில் சிவபெருமான் கூறியுள்ளார்.

மரிக்கொழுந்து எடுக்கும் முறை:-

பௌர்ணமிக்கு முன்னதாக ஸப்தமி அல்லது த்ரயோதசி திதியில், மரிக்கொழுந்து செடியை அஸ்த்ர மந்திரத்தால் ப்ரோக்ஷித்து, ஸம்ஹிதா மந்திரத்தால் பூஜித்து. தமனபைரவரை நினைத்து "சிவபெருமானது பூஜைக்காக எடுக்கிறோம்" என்று சிவபெருமானது ஆணையைத் தெரிவித்து பின் பக்குவமாக எடுத்து வேரோடு மண் மற்றும் நீரால் நிரப்பப்பட்ட பாத்திரத்தில் கொண்டு வரவும்.

யாகசாலை அமைப்பு:-

யாகசாலையின் நடுவில் மண்டலேச்வரருக்கான வேதியும், அதற்கு கிழக்கில் அறுகோண குண்டமும் ,ஈசானதிக்கில் கும்பவேதியும், உரிய அலங்காரங்களோடு செய்யவும்.

மண்டலம்	:-	பத்மபத்ர மண்டலம்

கும்பவேதியில் பத்து கும்பங்களை (சிவ, சக்தி, அஷ்டவித்யேசர்) பூஜிக்கவும். மண்டலேச்வரரையும் அர்ச்சித்து பாத்யம், ஆசமனம், அர்க்யங்களைக் கொடுக்கவும்.

பாத்ய த்ரவ்யம்	:-	வெண்கடுகு
ஆசமன த்ரவ்யம்	:-	தர்பைப்புல் நுனி
அர்க்ய த்ரவ்யம்	:-	குங்குமப்பூ

விதிப்படி சிவாக்னி ஸம்ஸ்காரம் செய்து சிவபெருமானை ஆவாஹனம் செய்து யாகத்தைச் செய்யவும்.

யாக இத்மம் (விறகு)	-	சந்தனக்கட்டை
சமித்து	-	ஆல்

முன்னர் கொண்டு வந்த மரிக்கொழுந்தை பாத்திரத்தில் வைத்து ஸம்ஸ்கரித்து ஸ்பர்சாஹுதியைச் செய்யவும்.

பின்னர் யாகத்தை முடித்து உபசாரங்களைச் செய்து ஸம்ஸ்கரிக்கப்பட்ட மரிக்கொழுந்தை பரிசாரகர் சிரசின் மீது ஏற்றி வாத்யகோஷங்களுடன் சிவ ஸன்னதியை அடையவும்.

சிறப்பு அபிஷேகங்களின் இறுதியில் ஸ்நபன கும்பத்தை அபிஷேகம் செய்து அலங்காரம் செய்யவும்.

யாகத்தில் பஸ்மமான சந்தனபஸ்மத்தை பெருமானுக்குப் பூசவும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வஸ்த்ரம் - சித்ர வர்ணம் (பல வர்ணம்) மற்றும் மகிழம்பூ வர்ணம் (வெளிர் பச்சை)

ஆபரணம் - பத்மராகம்

புஷ்பம் - கடம்பம்பூ, வாழைப்பூ.

பத்ரம் - வன்னி

சிவபெருமானுக்கு மேற்கில் மரிக்கொழுந்தின் வேரை மண்ணுடன் ஸத்யோஜாத மந்திரத்தினாலும், ஹ்ருதய மந்திரத்தினாலும் வைத்து பூஜிக்கவும்.

வடக்கில் மரிக்கொழுந்தின் காம்பு மற்றும் காம்புடன் கூடிய நெல்லிக்கனியை வாமதேவ மந்திரத்தினாலும் , சிரோ மந்திரத்தினாலும் வைத்து பூஜிக்கவும்.

தெற்கில் விபூதி கிண்ணத்தை அகோர மந்திரத்தினாலும், சிகா மந்திரத்தினாலும் வைத்து பூஜிக்கவும்.

கிழக்கில் மரிக்கொழுந்தின் பூவையும்,தந்ததாவனத்திற்கு பற்குச்சியையும் தத்புருஷ மந்திரத்தினாலும், கவச மந்திரத்தினாலும் வைத்து பூஜிக்கவும்.

ஈசானத்தில் பழங்களையும், சந்தனத்தையும் மூலமந்திரம், சிவகாயத்ரீ மந்திரத்தாலும் ஸ்தாபித்து சுவாமியை அஷ்டபுஷ்பங்களால் பூஜித்து மரிக்கொழுந்துகளைச் சாற்றவும்.

பின் சிறிது மரிக்கொழுந்தை அறுகு, அக்ஷதைகளுடன் ஆத்ம,வித்யா, சிவதத்வாதிபதியாகச் சிவபெருமானை விதிப்படிபூஜிக்கவும்.

தூபம்	-	சந்தனம்,அகில், பச்சைகற்பூரம் கலந்து கொடுக்கவும்.
தீபம்	-	புஷ்பதீபம் போல் அடுக்கில் உ00 தீபங்கள் ஏற்றவும்.
நிவேதனம்	-	மஞ்சள்,கண்டங்கத்திரிக்காய் சாதம்
வ்யஞ்ஜனம்	-	இஞ்சி பச்சடி
பானீயம்	-	நதியில் ஊற்று நீர் எடுத்து வடிகட்டி எடுத்து அதில் விளாமிச்சை வேர், சுக்கு,வெல்லம் கலந்து பானீயம் கொடுக்கவும்.
முகவாசம்	-	கஸ்தூரியோடு சேர்த்து தாம்பூலம் நிவேதிக்கவும்.
பண்	-	சீகாமரம் *(ஶ்ரீகாமரம்)*
ராகம்	-	தேசிகம்
தாளம்	-	சண்டபின்ன தாளம்
நர்த்தனம்	-	ஆரூட நர்த்தனம்
வாத்யம்	-	மிருதங்கம்

பூஜைகளை முடித்து பரமேச்வரனைப் ப்ரார்த்திக்கவும்.

அர்த்தஜாமபூஜையின் முடிவில் மரிக்கொழுந்தை எடுத்து சண்டேச்வரருக்குச் சாற்றவும்.

ஆசார்யரையும், ஏனைய தீக்ஷிதர்களையும் பூஜித்து வஸ்த்ர, தக்ஷிணாதிகளால் த்ருப்தி செய்யவும்.

இப்படி விதியுடன் தமனபூஜையைச் செய்விப்பதால் அரசன் வெற்றியையும், புத்திரனை வேண்டுபவர் புத்திரனையும்,அவரவர் விரும்பும் பலன்களையும், மோக்ஷத்தை விரும்புபவர் மோக்ஷமும் பெற்றுச் சிவமாவார் என்பதில் சந்தேகம் இல்லை.

சித்திரை மாத தமனபூஜை முற்றும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

വൈശാവമന്ധ വൗജാവടൃ വ്യ്രാസം ഹഃ

ജയാതസ്സംവ്യ്രവക്ഷ്യാഴി മന്ത്രവൗജാവിധിം ശ്രൃണ് ।
വരഷെ ഹാനള ച യന്ത്രാസൈ തന്ത്രാസെ ശക്ത്രവക്ഷകെ ॥ 1

വവൂയന്തത്ത യഋരക്ഷം വിശാവാജക്ഷസംയതെ ।
നാഭീഷൊഌശഹീനെ ത വൗജാവൗവൂഴിനെ ചസെക ॥ 2

ഷകഠാസൈ ചിനക്ഷത്രെഠാസവൗജാചയങ്ങസെക ।
മന്ധവൗജാം ശ്രൃണ്ഷ്വായ സായജ്യവഋസിക്ക്ഴ്ഴ ॥ 3

വൗവൈവൂാത്തവിധിനാ യാമം വെഴികാം ശാസ്ത്ര വച്ചസെക ।
തത്ത്വൗവൈവൂനൈവ കണ്ണഞ്ഞ വൗവവൂവക വസികണ്ഠയെക ॥ 4

ഷെശാനെ്യ വെഴികാം കരകാ ഠശകംഹഞ്ഞ ഠകൃഉെ ।
വെഴ്ചൈവഉഠാകാങ്ങാവ്യഠണ്ണൃഃ ॥ 5

മന്ത്രവൗജാം വ്യകതൂവ്യം ഷട്ഹെഠം മന്ത്രവരക്ഷകഴ ।
ജമസൗമിസിവരക്ഷഞ്ഞ ചന്ദനദെവഴാസകഴ ॥ 6

വിഷമം ഠായവം വ്യ്രാത്തം മന്ധവരക്ഷം വിധീയതെ ।
ഉത്തഠംമന്ധവരക്ഷംസ്യാക ശെഷ്ഠകൃഠഠചതെ ॥ 7

ഷമം സഹസ്രസ്ഷ്യാച സകസം കാഷ്ഠഠാഹസെക ।
ഠശനിഷ്ഠവ്യഠാണഞ്ഞ ശമ്യാകാം ഹെഠനിഴിവൂതാഴ ॥ 8

താഌയെക കാഷ്ഠഠഌ്യച ശിരൊഷം ഠയിതംവരഷഴ ।
ശഌവസെത്ത സഠാഴായ കസ്തൗസീചാമസഞ്ഞയാ ॥ 9

കവവൂൗസ യക്ഷകഴവൂഞ്ഞ ഹിഠാംബനാഹിഠണ്ണരൊ ।
വടെഷ ശിവഠഹ്യചവൂ്യ ശിവംസംവൗജയെത്തഃ ॥ 10

വൗവൈവൂാത്തവിധിനാഹകാ സ്വശവൂാഹതിംസഠാചസെക ।
വസിചാസകഠാഹൗയ ഉഷ്ണീഷാഴിസമുക്ഷരതഴ ॥ 11

സമിരം വീനശൈന്ദ്രൗക്ഷിവൂ വ്യ്രാഴക്ഷിണ്യകൃ്രഠണ വാ ।
മഹവൂമെഹെ നിവെശ്യായ ഠൗമൃബെസെഹിഷെചയെക ॥ 12

മന്ത്രാഴകംവ്യ്രകവീവൂത വൗവവൂവചിയിനാചസെക ।
ശ്യാഠവണവൂനിഹം വസ്ത്രം വെഷ്യെക വസിതഃകൃ്രഠാക ॥ 13

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூஜ்ஜூஷெநாஜ்ஜிதம் மநூம் ஜெவயெஜ்ஜிஜவீஂகெ ।
கஷொத்தூஶதஸஜ்ஜ்வா ச வஜ்ஜவீஜஜூ ஶாமுயா ॥ 14
ஷ்வணெடுந முாஜ்ஜிதம் ஜகெ்ஷ முிஜூஜூஜகுநி ஶாவயெக் ।
கூவீஂ ஜக்தவஜ்ஜூம் வ்ஷாவீ ச வாடிமீ தயா ॥ 15
வூஷைஷஹ்ஷசுயெக் வஸ்ஸாக் ஷிவ்வவதை்ஷசுயெக் ।
கவித்தூம் வெணூஷீஜெந கஷாஷிம் ஷிவாஶுகெ ॥ 16
நாஜூஜைவ கூஶ்ஜாணூம் வ்ஷஜநெந வஶிவ்மூதஜ் ।
வாநீயஷஜநமுாவஷஞு உஷொஜகூஜிஹொசஷதெ ॥ 17
ஜீஜகூம் ஶகூடுஷா சைவ தஜூகெஷ ஜிஶூஜூத்தஜ் ।
வாநீயஷஜிதி வஷாதம் ஜூவவாஸஷதஸ்ஶூஜணூ ॥ 18
ஷமுாமுவஜ்ஜசூணுஞு ஜயூநாச வஶிவ்மூதஜ் ।
ஜூவவாஸஷதஃவஸ்ஸாக் தஜதீயஷம் யூவஜெவ ச ॥ 19
ஜீவம் ஜிஶதஶஜ்ஜ்வா ச ஶெஷம் வூவடுவஜாசஷக் ।
வாஜஷம்கஜ்ஜாமுஸம்யூக்கம் கவடுஷாசஜஷஜூத்தஜ் ॥ 20
கவடுஷஹிஜெந ஸஹிதம் ஶிவாய வஶிஜாவயெக் ।
கஜைஃ வூணடுாஹூதிநகூா ஜநூநம் வநைஸஸ்ஸஷக் ॥21
கஷாஜீஷ வாசயெச்சைவ கூணெஜ்ஜஷ்நிம் நியொஜயெக் ।
ஸஜியம் ஷிவ்வஜெவொக்கம் யவம் ஹூகூா கூஜெணதூ ॥ 22
கஷவடுஹிவடுமீகூஜகூா கஷ்நி ஜஷாஸஷஸெக் ।
வாஜஷஞுஜூஜவம் ஶெஷ்டம் ஷாமம் ஷடு்வஜஜூசஷதெ ॥ 23
மீதஞு ஜ்நவஸிஹூஞு தாஉஜூக்வடிதஷயா ।
ஜணுவாஜம் ஸூநஜத்தஞு ஜாவயெக் ஶிவஸஷியள ॥ 24
யாஜாஷடுாஷெ தஷஜெக் மஙம் சணெஶாய வ்ஜாவயெக் ।
ஷவம் வை ஜாஸவூஜாஞு ஸாயூஜ்ஷவஜஜாவ்நூயாக் ॥ 25

ஐதி வைஶாவமாஸவூஜா வடுமு:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைகாசி மாத கந்த பூஜை

சூரியன் ரிஷப ராசியில் இருக்கும் மாதத்தில், அதாவது வைகாசி மாதத்தில் பௌர்ணமி திதியோடு கூடிய சுக்லபக்ஷத்தில் விசாக நக்ஷத்திரத்தோடு கூடிய விசேஷ தினத்தில் கந்த பூஜை எனும் சந்தனம் சாற்றும் பூஜையைச் செய்ய வேண்டும்.(பதினாறு நாழிகைக்குக் குறைவாக இருப்பின் பூஜையை முதல் நாளே செய்யவும்.)

ஒரே மாதத்தில் இரண்டு நக்ஷத்திரம் வருமாயின் இருமுறையும் மாஸபூஜையைச் செய்யவும். பூஜைகளை முடித்து பரமேச்வரனைப் ப்ரார்த்திக்கவும்.

.கந்தபூஜை சிவஸாயுஜ்யத்தைத் தரவல்லது என்று சிவபெருமான் காரணாகமத்தில் கூறுகிறார்.

சந்தனம் எடுக்கும் முறை:-

காரணாகமத்தில் ஆறு வகையான கந்த மரங்கள் கூறப்படுகிறது. அவை அகில், மலைச்சந்தனம், வெண்சந்தனம், தேவதாரு, செஞ்சந்தனம், மாதவம் என்பனவாகும். இவைகளில் வெண்சந்தனம் உத்தமம், மற்றவை மத்யமமாகும்.

நல்ல லக்ஷணமுடைய சந்தனக்கட்டையில் ,பத்து நிஷ்க அளவில் தங்கத்தில் ஆணி போல் செய்து அடித்து சந்தனத்துடன் சேர்ந்து அரையும் வண்ணம் செய்தல் வேண்டும். அரைத்த சந்தனத்தை சுத்த வஸ்த்திரத்தில் எடுத்து கஸ்தூரி, கோரோஜனை, பன்னீர், ஜவ்வாது, புனுகு, பச்சைகற்பூரம் முதலான வாஸனாதி த்ரவ்யங்களைச் சேர்க்கவும்.

யாக பூஜை:-

முன்னர் சித்திரை மாதத்தில் சொல்லப்பட்டவாறே அறுகோண குண்டத்தோடு கூடிய யாகசாலை அமைக்கவும்.

ஈசானத்தில் கும்பவேதியில் பத்து கும்பங்களில் கந்தோதகத்தால் பூரிக்கவும். சிவ,சக்தி, அஷ்ட வித்யேசர்களைப் பூஜித்து நடுவில் அமைக்கப்பட்ட வேதியில் மண்டலேச்வரரையும் உமா காந்த மண்டலத்தில் விதிப்படி பூஜிக்கவும்.

பாத்ய த்ரவ்யம்	:-	கச்சோலம்
ஆசமன த்ரவ்யம்	:-	பச்சை கற்பூரம்
அர்க்ய த்ரவ்யம்	:-	எள்ளு

விதிப்படி சிவாக்னி ஸம்ஸ்காரம் செய்து சிவபெருமானை ஆவாஹனம் செய்து யாகத்தைச் செய்யவும்.

யாக இத்மம் (விறகு)	-	பலா மர விறகு
சமித்து	-	வில்வ சமித்து
தான்யம்	-	யவை

ஸ்தாலீபாகமாக யாகாங்க ஹவிஸ் விதிப்படி செய்யவும்

அரைத்த சந்தனத்தை சுத்தமான பாத்திரத்தில் வைத்து ஸம்ஸ்கரித்து ஸ்பர்சாஹுதியைச் செய்யவும்.

பின்னர் யாகத்தை முடித்து உபசாரங்களைச் செய்து ஸம்ஸ்கரிக்கப்பட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்தனத்தைப் பரிசாரகர் சிரசின் மீது ஏற்றி வாத்யகோஷங்களுடன் சிவ ஸன்னதியை அடையவும்.

சிறப்பு அபிஷேகங்களின் இறுதியில் ஸ்நபன கும்பத்தை அபிஷேகம் செய்து அலங்காரம் செய்யவும்.

குங்குமப்பூ முதலானவைகளோடு கூடிய சந்தனத்தினால் லிங்கத்தின் பீடம் முழுவதும் காப்பு போல் செய்யவும். தங்கம் சேர்த்து அரைத்த சந்தனத்தை விசேஷமாக லிங்க மூர்த்தியின் சிரசில் சாற்றவும். நூற்றெட்டு தாமரை பீஜங்களாலான மாலையை சுவாமிக்கு சாற்றவும்

வஸ்த்ரம்	-	கருநீல வண்ணம்
ஆபரணம்	_	பத்மராகம்
புஷ்பம்	-	அரளி, செந்தாமரை, புலிநகக்கொன்றை,பாதிரி
பத்ரம்	-	வில்வம்
தூபம்	-	தேன் விட்டு கொடுக்கவும்.
தீபம்	-	உ00 தீபங்கள் ஏற்றவும்.
நிவேதனம்	-	விளாம்பழம் -மூங்கிலரிசி சாதம்
வ்யஞ்ஜனம்	-	நார்த்தங்காய்- பூசணிக்காய் பச்சடி
பானீயம்	-	இளம் சூடான வெந்நீரில் ஜீரகம், நாட்டுச்சர்க்கரை கலந்து பானீயம் கொடுக்கவும்.
முகவாசம்	-	ஏலக்காய்,கிராம்பு சேர்த்து தாம்பூலத்தை தேனில் நனைத்து நிவேதிக்கவும்.
பண்	-	ரத்னசிம்மம்
ராகம்	-	ஷட்பதம்
தாளம்	-	உத்கடித தாளம்
நர்த்தனம்	-	தண்ட பாத நர்த்தனம்
வாத்யம்	-	முரசு

பூஜைகளை முடித்து பரமேச்வரனைப் ப்ரார்த்திக்கவும்.

அர்த்தஜாமபூஜையின் முடிவில் சந்தனத்தை எடுத்து சண்டேச்வரருக்குச் சாற்றவும்.

ஆசார்யரையும், ஏனைய தீக்ஷிதர்களையும் பூஜித்து வஸ்த்ர, தக்ஷிணாதிகளால் த்ருப்தி செய்யவும்.

இப்படி விதியுடன் கந்தபூஜையைச் செய்விப்பவர் சிவஸாயுஜ்யத்தை அடைகிறார்.

<u>வைகாசி மாத கந்த பூஜை முற்றும்.</u>

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ജ്യേഷ്ഠാഭ ഗുരുപൂജാ പദ്ധതി വ്യാഖ്യാനഃ

അഥാതസ്സംപ്രവക്ഷ്യാമി ഗുരുപൂജാവിധിക്രമം।
ജ്യേഷ്ഠേമാസി സിതേ പക്ഷേ ശുക്ലപക്ഷേ ച പൂർണ്ണിമേ॥ 1
ഉത്തരേഷു പൂജനം കാര്യസ്വപദവൂര്യർക്കം വിശേഷതഃ
പവൂര്യർക്ഷയർക്ഷം വാ ജന്മവ്യായാമ്യേവ വാ॥ 2
നാഡികാഷോഡശേ ഹീനേ പൂജാ പൂർവദിനേ ച ചരേത്।
ഷട്കാലേ ത്രിനക്ഷത്രേ ശസ്യക്ഷേഷു പൂജയേച്ഛിവം॥ 3
നിത്യപൂജാദിനേ പ്രാപ്തേ ക്രിയാകൃത്യവിഹീനകേ।
തദ്ദോഷശമനാർത്ഥായ ഭാസപൂജാം സമാചരേത്॥ 4
പൂർവ്വാഹ്ണയാമം സങ്കല്പ്യ ശോധന സ്ഥണ്ഡില സംയുതം।
ചതുർദ്വാരസമായുക്തം ചതുസ്തോരണഭൂഷിതം॥ 5
മധ്യേ വേദിം പ്രകല്പ്യാഥ ഉപവേദിം പ്രകല്പയേത്।
തത്പൂർവേ കുണ്ഡമിത്യുക്തം ശൈവാഗ്നിം പരികീർത്തിതം॥ 6
വേദികായാംശ്ചൈവ നവനാഭാംശ്ച മണ്ഡലം।
പഞ്ചവർണൈരലങ്കൃത്യ പൂർവവദ്വിധിനാചരേത്॥ 7
ശാലാന്തേ വേദികാം കൃത്വാ ദശകുംഭം ന്യസേത്തതഃ।
കുംഭസ്യ ബാഹ്യദേശേ തു ധാന്യപീഠൈരലങ്കൃതം॥ 8
ശംഖപാത്രം സമാദായ ക്ഷാളയേദസ്ത്രവാരിണാ।
പഞ്ചാമൃതം ഗുരോശ്ചൈവ അപക്വം പ്രസാദയേത്॥ 9
കൽപ്യാദാരതാപസ്യ ച സുഗന്ധം ച വിശാലകം।
പാത്രം പുഷ്പസുഗന്ധം ച സ്നാനകാലേ വിശേഷതഃ॥ 10
നരസിംഹം പവൂതശ്ചൈവ ഭക്ഷ്യകാന്തം ച പൂജനം।
നൈവേദ്യകാലേ സംപൂജ്യ പനസം ച തതഃ പരം॥ 11
മരീചാമ്ര പനസം ശൈലകം പനവാനസം।
ചൈവ ഇത്യേതേ ചതുർവിധം പ്രകീർതിതം॥ 12
പനസ്യാമ്രം ശൈലകം ച
പൂജാചൈവ പ്രശസ്യതേ।
പായസം പായസം സഹസ്രം ച തസ്യാർദ്ധം വാ തദർദ്ധകം॥ 13
സഹസ്രാംശ്ച സാഹസ്രം പൂർണം വിദ്യാത്തദർദ്ധകം।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விதாஉ௦ வமுஸாஹஸ்ர௦ தஸ்ஆசூ௦ வா தஜசூக௦॥ 14
குஜாய க்ஷாஉயெசைவ ஶுஅவாதெ ச ஓாவயெக்॥
வஅவொக்தவியிநா ஹுத்வா ஸுஶூாஹுதி௦ ஸஓாசனெக்॥ 15
வனிசாமகஓாஹுய கஶ்வுகெஉந௨வச॥
ஜ௦ப௦ ச ஸஜிஶா ஹுத்வா வமுக௦ ஹொஓயெத்தத:॥ 16
வணூாஹுதிஷத: க்ருத்வா வடை ஸ௦யொஜயெத்தத:॥
வனிசாமகஶிஷெஷ்ச ஸூமிக௦ விநஸெத்தத:॥ 17
வ்ராஜக்ஷிண்க்ரூ௨ணைவ மஹூமெஹெ நிவெஶயெக்॥
வாஜ்ஞு வஅவூவக் கஷ்ஷ விஶெஷ௦ வாஸிவாஜித௦॥ 18
நிக்ஷிவ வாஜ௨வொக்த௦ கய௦ ஶ௦ஹொவிவாஸிஜ௦॥
வாஸி வாஸிஜஶபெ ச ஹிஉவா௦ப வ்ருக்கீதிதூ௦॥ 19
கூச௨ ச முவஜ்ஞு கவசூ௦ வ்ரீஹி ச நிக்ஷிவெக்॥
கஹிஷெகஷத: க்ருத்வா வமொஜக௦ விஶெஷத:॥ 20
வடாஷஓஹிஷிசாய க்ருஷ்ணவஸ்த்ரேண வெஷயெக்॥
உளக்திகாஹுணஸைவ ஶதஸஜ்வா கூஉண வா॥ 21
மஹுமுவதைமுஜிஶ்ரேண மஉாமெவநஉத்தஉ௦॥
பரஹதீ மக்தமஉஞ ஶ்வதாகூ௦ ச௦வகஷயா॥ 22
வஷ்ஓாமுாவிஹஷஷு பில்வவைத்ரஸூஉசூயெக்॥
ஸஷூவாஷ௦ நிவெஜாய வஜ்ஞநஞ ததஶ்ஶூரண॥ 23
பரஹதீ மாஜஓாஷஞவாநீய்ஞு ததஶ்ஶூரண॥
ஸவடை ஜமுஓாஜாய ஓாஷஓாத்ர௦ ஸவணூக௦॥ 24
மஸெந ஓிஶிர்த௦ ஷ்வணூ௦ கூஹ்ஓஉஜெ விநிக்ஷிவெக்॥
ஹெஉொஜகஓிதி ஜ்ஞெய௦ வாநீயஓிதி கீதிதூ௦॥ 25
வநஸாமெண ஸஓிஶ்ர௦ யவஸைவ வ்ருக்கீதிதூ௦॥
வி௦ஶதிசி௦ஶதிசைவ ஓீவாமாயநஉசதெ॥ 26
வாஜ௦ ஜக்காஸிஸ௦யுக்த௦ நூக்த௦ வை கூஹித௦ ஹவெக்॥
மீத௦ ஓஶாக்ஷீ செவ மாம௦ ஹைமவஉசதெ॥ 27
யாஓாகூாஷெ தஜெசைவ சணெஶாய வ்ருஓாவயெக்॥
ஷவ௦ஸஜ்ஜுஷ விபிநாஸவஂகாயூ௦ஜய௦ ஹவெக்॥ 28
இதி ஜெஷ்டஓாஸ வமுவஜா வடம

𑌮𑍁𑌕𑍍𑌤𑌾 𑌵𑌜𑍍𑌰𑌂 𑌤𑌤𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌰𑌾𑌗𑌂 𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌵𑌰𑍍𑌣𑌕𑌮𑍍॥
𑌮𑌰𑌕𑌤𑌂 𑌚 𑌰𑌤𑍍𑌨𑌾𑌨𑌿 𑌨𑌵𑌰𑌤𑍍𑌨𑌾𑌨𑌿 𑌵𑌰𑍍𑌣𑌕𑌮𑍍।
𑌵𑌰𑍍𑌣𑌰𑌤𑍍𑌨𑌮𑌿𑌤𑌿 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑌾𑌦𑍍𑌯𑌾𑌹𑌵𑍇 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌕𑌮𑍍॥
𑌰𑌤𑍍𑌨𑍋𑌦𑌕𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌲𑍋𑌹𑍋𑌦𑌕𑌮𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍।

மாணிக்கம், இந்திரநீலம், வைடூர்யம், பவழம், முத்து, வைரம், புஷ்பராகம், ஸ்படிகம், மரகதம் முதலிய ரத்னங்களோடு கூடிய ஜலம் ரத்னோதகம் எனப்படும்.

....

𑌲𑍋𑌹𑍋𑌦𑌕𑌮𑍍

𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌜𑌤𑌂 𑌤𑌾𑌮𑍍𑌰𑌮𑌾𑌯𑌸𑌂 𑌤𑍍𑌰𑌪𑍁 𑌸𑍀𑌸𑌕𑌮𑍍।
𑌆𑌰𑌕𑍂𑌟𑌂 𑌤𑌤𑌃 𑌕𑌾𑌂𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌤𑍍𑌤𑌂 𑌲𑍋𑌹𑍋𑌦𑌕𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍॥

தங்கம், வெள்ளி,தாமிரம், இரும்பு, தகரம், சீசகம், ஈயம், பித்தளை, **வெங்கலம்** முதலிய உலோகங்களோடு கூடிய ஜலம் லோஹோதகம் எனப்படும்.

𑌧𑌾𑌤𑍂𑌦𑌕𑌮𑍍

𑌸𑍌𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌮𑌞𑍍𑌜𑌨𑌂 [illegible] 𑌹𑌰𑌿𑌤𑌾𑌲𑌂 𑌮𑌨𑌶𑍍𑌶𑌿𑌲𑌾।
𑌗𑍈𑌰𑌿𑌕𑌂 𑌗𑍋𑌰𑍋𑌚𑌨𑌾 [illegible] 𑌧𑌾𑌤𑍂𑌦𑌕𑌮𑌿𑌹𑍋𑌦𑌿𑌤𑌮𑍍॥

சௌராஷ்ட்ர தேச கருப்பு பொடி, மை, மஞ்சள், அரிதாளம், மனஸ்சிலை, கைரிகம், கோரோசனை ஆகிய தாதுக்களோடு கூடிய ஜலம் தாதூதகம் எனப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஙீஜொஉகூ

ஶாழி கொஉ வஉநீவாரவி ஜூதிமுஸஷவ:।
ஶ்யாஶாகஷாஷி கய வைஙீஜொஉகூஜஹொ ஜி தழ॥

நெல், வரகு, செந்நெல், திணை, எள்ளு, கடுகு, சாமை, யவை (பார்லி) நெல், முதலிய தானியங்களோடு கூடிய ஜலம் பீஜோதகம் எனப்படும்.

மஹொஉகூ

நவநீதம் ௨ கவூரம் தகெமுாவதஸம்யதழ।
௮நநம் முமகஷம் ௨ வாாஜொஶீஉஸகா:॥
கஜஉம் ஹாஶிவெரம் ௨ கஜொஷம் ஜாதிஜெவ ௨।
வஹிரத ௨ணிவகெயதம் மஹொஉகஜிதி ஸூதழ॥

வெண்ணை, பச்சை கற்பூரம், அகில், ஏலக்காய், ஜாதிபத்ரீ, சந்தனம், நாகப்பூ, கீழாநெல்லி, உசீரம், விலாமிச்சைவேர், குங்குமப்பூ, வெட்டிவேர், கச்சோலம், ஜாதி - ஜாதிக்காய் இவைகள் சேர்ந்த ஜலம் கந்தோதகம் எனப்படும்.

வஶிஉாஜநொஉகம்

மொகஷரம் ஸஹஷெவீ ௨ விஷ்ணுகாநி: கரதாஜுமு:।
ஶிஶிஷெநீவரம் ராதிஜெஹிஉாஜநஉசஙெ॥

நெரிஞ்சில்,சஹதேவீ,விஷ்ணுக்ராந்தி, யானைவணங்கி, கருநெய்தல், இந்தீவரம் - காட்டுவாழை, ராத்ரீ - மஞ்சள் இவைகள் சேர்ந்த ஜலம் பரிமார்ஜநோதகம் எனப்படும்.

வஶிஉாஜநழ

உவவாஜரஶு வஉம் ௨ கஶாஹும் மெளரஸஷவ:।
ஹஶா கரதாஜுமியதம் வஶிஉாஜநஉசஙெ।

அருகு, தளிர்,தாமரை,தர்ப்பைநுணி, வெண்கடுகு,யானைவணங்கி இவைகள் கலந்த ஜலம் பரிமார்ஜநோதகம் எனப்படும்.

வஷொஉகூ

வஉம் ரகொதஙம் வஶாக வாடமீ வஉகஸயா।
வநாமகரவம் நாமநஙாவதஷ ௨உஜீகா॥
ஷெதாகவகமெயத வஷதொயஜிஹொஶிதழ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாமரை,செங்கழுநீர்ப்பூ, பாதிரி, செண்பகம், புன்னை, அரளி, நாகப்பூ, நந்தியாவட்டை, மல்லிகை, வெள்ளெருக்கு, மகிழம் ஆகிய புஷ்பங்களுடன் கூடிய ஜலம் புஷ்போதகம் எனப்படும்.

ஊாநெ)ாஉகூ௸

கூ~ஷ௦ கூ~டீ௦நடீ௦ ஹொ௦ஹ௦ அநந௦ கூ~ஜ~ஃ௦ தயா।

கவ~ூஸொஸிஈஸ௦ய~த்த௦ ஊாநெ)ாஉகூஶிஹெஶிதழ॥

மான்யோதகம் அல்லது ஆட்யோதகம் கீழாநெல்லி, பெருங்கோரை, உலோகம்,சந்தனம், குங்குமப்பூ, பச்சைகற்பூரம், விலாமிச்சைவேர் சேர்ந்த ஜலம்

சுஷெஸ்த்ர தகூ௸

ஶ~ூ௦ கவாஹொ ஹஶிணீ விநாகூ௦ வாஈஶ~ஷ்தயா।

வாஸொ கூஷஊாருாஹைஊாஷ்ர தைஈத்தாஷெஸ்த்ர ாஉகூ௦ ஹவெசு॥

சூலம், கபாலம், மான், வில், மழு, பாசம், ஜபமாலை மேற்கண்ட அஸ்த்ரங்களை தங்கத்தால் செய்து நீரில் போட்டு பூஜித்தல் அஸ்த்ரோதகம் எனப்படும்.

வஹொாஉகூ௸

வநஸொ நாருிகெஈஷ்ர ஊாத~ஶ~ஜ்ஞயம் ததஃ।

நாஈஜ்ஞயஈஷ்ராஹை௫ய~த்தஉஷிந வஹொாஉகூ௸॥

பலா,தேங்காய், மாதுளை, கொம்மட்டி மாதுளை,நார்த்தை,கிடார நார்த்தை, வாழை, மாம்பழம் சேர்ந்த ஜலம் பலோதகம் ஆகும்.

கஷாயொாஉகூ௸

வருாஸொாஉ~ஹ்ஊாஈஶவ்த்தஉய~கூாஃ ஷ்ருகூஷவாடீஞீ

ஜ்வஉ~த்தஹ்ரிஸ்ஹஊாய~த்த௦ கஷாயொாஉகூீஶிதழ॥

புரசு, அத்தி,அரசு, நாயுருவி, இச்சி, ஆல், பாதிரி,நாவல் மரப்பட்டைகள் கூடிய ஜலம் கஷாயோதகம் ஆகும்.

கூாஹொாஉகூ௸

ஸ~ய~ூகூாஹஸ்வயக்ஷாஹொ ஶ்ராஉகஷ்ருந்ர கூாஹகஃ।

நிகூரஹஃ வஹுஹிய~த்த௦ கூாஹொாஉகூஶிதி ஷ்ரதழ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூர்யகாந்தம், சந்திர காந்தம், இரும்பு காந்தம்,ப்ராமகம், நிக்ருந்தம் சேர்ந்த ஜலம் **காந்தோதகம்** ஆகும்.

ஊலொாதகு

உஶீரஂ ஹரிலொஂ ச வீவரீ வாஷஂ தயா।
ஸ்ரீவணூஷுதி வஜைஹியாூதஂ ஊலொாதகஂ ஸூரதஂ॥

விலாமிச்சை வேர், வெட்டிவேர்,பீவரி வேர்,தாமரைப்பூ, மயில் தோகை சேர்ந்த ஜலம் **மூலோதகம் எனப்படும்.**

வரு கலொாதகு

ஶயாஶிவி ஹஜூதுமொ சநாஹுஜாஜகஂ।
கரதாஜுறிஷு வஜைஹியாூதஂ வஸாதலுலொாதகஂ॥

மயில்தோகை,பூவரசமரப்பட்டை, கோரோசனை, கையாந்தகரை, ஆனைவணங்கி

ஶாஜூநொாதகு

ஶவூாதிரு காஶாகைூஷு ஶாஜூநஂ தாவஹிதீயதெ।

அருகு, எள்,தர்ப்பை நுனி சேர்ந்த ஜலம் மார்ஜனோதகம்

ஊதொாதகஂ

வவூதெ ந நதீதீரெ வஸ்ரீகெ ககூடாவடெ।
வரஷஶரஜெ ச ஸஷுதெ ஸஶாஷெ மாஜஷஜகெ॥
கஷஶூஹிஃ ஸஶாயாதஂ ஊஹூஃ வாரிகீூதிூதஂ।

மலைமண், நதிமண், புற்றுமண், நண்டுவளைமண், மாட்டுக்கொம்புமண், புண்ணிய க்ஷேத்ர மண், கடல்மண், யானை அடிமண், இவைகளுடன் கூடிய ஜலம் ம்ருதோதகம் என்று அழைக்கப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஓம் நம சிவாப்யாம்

ஆகமங்களில் பத்திர புஷ்ப வகைகளும், பயன்களும்

பரஸ்பர தபஸ் ஸம்பத் பலாயித பரஸ்பரௌ,
பிரபஞ்ச மாதா பிதரௌ பிராஞ்சௌ ஜாயாதீஸ்தும:.

கட்டுரை ஆசிரியர்
ஆகம ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி
சைவாகம ரத்னம், ஆகம ப்ரயோக நிபுணர்
சிவஸ்ரீ G. கோடீஸ்வர குருக்கள் M.A.,
திருநள்ளாறு. ஸ்ரீ தர்பாரண்யேச்வர ஆலய அர்ச்சகர்.

சிவபரம்பொருளின் அருட்கருணையினால் படைக்கப்பட்ட இப்புவியில், காடு,மலை, நிலம், ஆறு என இயற்கை வளம், எங்கெங்கும் நிறைந்து காணப்படுகின்றது. சைவத்தின் மேலான சமயம் வேறில்லை என்ற சான்றோர் வாக்கிற்கு இணங்க, சைவசமயமே தலையாய சமயமாகும். உலக மக்களை இறைநிலைக்கு உயர்த்தவல்லது நமது சமயம். இறைநிலையை நாம் அடைய வழிபாடு எனும் முறைமையை வேதம், சாஸ்திரம், புராணம் இவைகள் வழிகாட்டுகின்றன. இவற்றுள் ஆமக சாஸ்திரமானது இறைவனை போற்றி வணங்கிட, இறைவனாலேயே படைக்கப்பட்டதாகும்.

திக் பஸ்ம ரஹிதம் பாலம், திக் கிராம மசிவலயம்.
திக் அனீசர்ச்சநம் ஜன்ம, திக் வித்யா மசிவாச்சரயாம்.

எனும் ஸ்ம்ருதி வாக்கியப்படி, நீறில்லாத நெற்றியும், கோயில் இல்லாத ஊரும், அரனை வழிபடாத பிறவியும், சிவனை சாராத, அறிய உதவாத கல்வியும் வீண் என கூறுகிறது. திருத்தொண்டர்-புராணத்தில்

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள
அண்ணலார் தனை அர்ச்சனை புரிய ஆதரித்தான்
பெண்ணில் நல்லவளாயினள் பெருந்தவக் கொழுந்து
என்றும் முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணத்தில்
எப்போதும் இனிய பிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போதும் ஆர்வமிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவராம் முனிவர்.

தெரிந்துணரின் முப்போதும் செல்காலம் நிகழ் காலம்
வருங்கால மாற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிய அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன
பெருந்தகையார் குலப்பெருமையாம் புகழும் பெற்றியதோ என்றும்,

இங்குநாத! நீமொழிந்த ஆகமத்தின்
இயல்பினால் உனை அர்ச்சனை புரியப்
பொங்குகின்றதென் ஆசை என்றிறைஞ்சி
போகமார்த்த பூண் முறையினாள் போற்ற என்றும் கூறியுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதன் கூற்று, அர்ச்சனை என்பது பூஜையின் ஒரு அங்கமான வெளிப்பாடு அர்ஹ பூஜாயாம் என்னும் தாது சொல்லிலிருந்து பூஜை எனும் சொல் உருவாகிறது.

பூர்யந்தே ஸர்வகர்மாணி, ஜாயதே ஞான மாத்மநி.
பூரணாத் ஞானதாத்ருத்வாத், பூஜாசப்த இஹோச்யதே (காரணாகமம்)

எல்லா செயல்களையும் நிறைவுசெய்து, நிறைவான ஞானத்தை அளிப்பது என இதன்பொருள். அப்பூஜையானது, பரசிவத்தைப் பூஜிப்பதால் மட்டுமே அடையலாம். ''சங்கராத் ஞானம் அன்விச்சேத்'' என்பதாலும், ''ஈசானஸ்ஸர்வவித்யாநாம் ஈஸ்வரர்'' என்று வேதம் கூறுவதாலும், பரமன் ஒருவரே மெய்ஞானத்தை அருள்பவர் என அறியமுடிகிறது.

பூஜயா விபுலம் ராஜ்யம், அக்னிகார்யனே ஸம்பதம்,
ஜபேந, பாப ஸம்சுத்திம், ஞானம் தியானேந சாச்னுதே.
கிந்த்வா தேஹா வாஸாநந்து, யப் பூஜயதி பக்தித
ஸ சிவஸ் ஸர்வகிருத் யஜ்வா ஜீவன்முக்தஸ் ஸ உச்யதே (விமலாகமம்)

பூஜையினால் விஸ்தாரமான ர்ாஜ்யத்தையும், அக்னிகாரியத்தினால் ஐஸ்வர்யத்தையும், ஜபத்தினால் பாபத்தினின்றும், சுத்தியையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைகின்றோம். ஆனால் எவர் ஒருவர் தேகம் இருக்கும்வரை சிவபூஜை ஞானத்தையும் செய்துவருகிறாரோ, அவரே சிவன், அவரே எல்லாம் செய்பவர். அவரே யாகம் செய்பவர். அவரே ஜீவன் முக்தர் என சொல்லப்படுகிறது. புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு என்பதாலும், போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன் என்பதாலும் புஷ்பமானது பூஜையில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. நாவுக்கரசர் பெருமான் தமது தேவாரப்பாடலில்.

கைகாள் கூப்பித் தொழீர் - கடி
மாமலர் தூவி நின்று
பைவாய்ப் பரம்பரை யார்த்த, பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்.

ஆக்கையாற் பயனென் - அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றியென்னாதஇவ்
ஆக்கையாற் பயனென்.?

என்பதனால், நமது கைகள் மலர்தூவியும், இறைவனைத் தொழுதும் பயன் பெறவேண்டுமெனக் கூறுகிறார். பூசையில் மலர்களை, 1. மந்திராஷ்டபுஷ்பம், 2. புஷ்பாஷ்டபுஷ்பம், 3. பாவநாஷ்ட புஷ்பம் என மூன்று வகைகளாக ஆகமம் சொல்லும்.

உத்தமம் ஆராமபுஷ்பாணி மத்யமம் வன ஸம்பவம்.
அதமம் விக்ரயம் சைவ, யாசகம், நிஷ்பலம் பவேத். (ஆகமம்)

என்பதனால், புஷ்பங்களையும், பத்ரங்களையும் பற்றிக்கூறுகையில், நந்தவனத்திலிருந்து பறித்த புஷ்பம் உத்தமம் என்றும், காட்டிலிருந்து எடுத்த புஷ்பம் மத்யமம் என்றும், விலைகொடுத்தும், யாசகமாகவும் பெறப்பட்ட புஷ்பம் அதமம் என்றும் ஆகமநூல்கள் கூறுகின்றன.

உத்தமந் தனக்கென வுற்ற நந்தனம்
மத்திமங் காட்டினில் மலர்ந்த பூவெலா
மித்தலத் தொருவன்வைத் திட்ட சூழலி
லத்தனை மலர்களு மதம மாகுமே. (புஷ்பவிதி)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனும் பாடல்கள் மூலமாகவும் அறியலாம். புஷ்பங்களை 1. கோட்டுப்பூ, 2. கொடிப்பூ, 3. நீர்பூ, 4. நிலப்பூ என நான்காகப் பிரிக்கலாம்.

கோட்டுப்பூ :

வன்னி பலாலெலுமிச்சை நாரத்தை கோங்கு
மாந்தாரை யூமத்தை மாவிலங்கை நொச்சி
பன்னியகில் சந்து மகிழ் மாதுளைமா வசோகு
பாதிரிவெள் ளெருக்கிலத்தை பலாசுநுணா நறவம்
புன்னைவிளா மருதுகொன்றை நொல்லிகுராச் செருந்தி
பொன்னினா விரைக்கிளுவை குருந்துவில்வ நாவன்
மன்னுதாதகி குளஞ்சி யலரிவெட்சி பவள
மல்லிகை சண்பக ஞாழல் கோட்டுப்பூ வகையே.

இப்பாடலில் மரக்கிளையில் பூக்கின்ற நாற்பது பூக்களைக்குறிப்பிடுகின்றார். பூ என்று பொதுப்பட கூறினும் பத்ரங்கள் இதில் சேரும். வன்னி, பலா, எலுமிச்சை, நாரத்தை, நொச்சி, மருது, அகில், சந்தனம், மா, இலந்தை, நுணா, விளா, மாவிலங்கை, நெல்லி, குருந்தம், குளுவை, வில்வம், நாவல் இவையெல்லாம் பத்திரங்களே, கோங்கு, நாகலிங்கம், புன்னை, மந்தாரை, பொன் ஊமத்தை, மகிழம்பூ, மாதுளை, பாதிரிப்பூ, வெள்ளெருக்கு, பலாசு என்ற முருக்கு, நறவம், என்ற குங்குமம், ஆவிரை, தாதகி என்ற ஆத்தி, குளஞ்சி என்ற கிச்சிலி, ஞாழல் என்ற புலிநகக்கொன்றை, அலரி, வெட்சி, பவழமல்லிகை, செண்பகம், ஞாழல் இவையெல்லாம் கோட்டுப்பூக்களாகும்.

கொடிப்பூவகை :

மருவாருங் காந்தள் காட்டு மல்லிகை முல்லை மௌவல்
கருவார் வெற்றிலை யேதாளி கருமுகை கருங்காக் கொன்றை
முருகாகும் வெண்காக் கொன்றை குருக்கத்தி முதலா வுள்ள
விருவாட்சி கொகுடி பிச்சி யிவையெல்லாம் கொடிப்பூ வாமே.

இப்பாடலில், மணம் நிறைந்த காந்தள், காட்டுமல்லி, முல்லை, மௌவல், கருநிறம் பொருந்திய வெற்றிலை, கூதாளி, கரியநிற அரும்பான காக்கொன்றை என்ற காக்கணம், வெண்காக்கணம், குருக்கத்தி, இருவாட்சி, கொகுடி, பிச்சி கொடிப்பூவாகும். வெற்றிலை நீங்கலாக 11 கொடிப்பூக்களின் வகைகளை இப்பாடலில் கூறப்பட்டு உள்ளது.

நீர்வகைபூ :

செய்ய தாமரை சேர்ந்த பொற் றாமரை
துய்ய தாமரை சொல்லிரண் டுற்பல
மைய செம்மையை வெண்மைய வாகிய
நெய்தன் மற்றிவை நீரின் மலர்களே.

இப்பாடலில் செந்தாமரை, வெண்டாமரை, செங்குவளை, கருங்குவளை, செம்மையாகிய ஆம்பல், வெண்மையாகிய வெள்ளாம்பல் என ஏழுநீர்ப்பூக்களின் வகைகள் பேசப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலப்பூவகை :

பட்டிநா யுருவி பூளை பச்சை செவ்வந்தி தும்பை
வெட்டிவேர் மருக்கொழுந்து கரந்தை யேவிஷ்ணு காந்தி,
மட்டவிழ் துழாய்செங் கீரைமத்தை செம்பரந்தை வங்க
மிட்டகொக் கிறக னிச்சம் வலம்புரி யிவை நிலப்பூ.

இப்பாடலில் பச்சை, மருக்கொழுந்து, துழாய் ஆகிய பத்திரங்களுடன், பட்டிப்பூ, நாயுருவி, பூளை, தும்பை, வெட்டிவேர், செவ்வந்தி (சாமந்தி), சிவகரந்தை, விஷ்ணுகாந்தி, ஊமத்தை, வங்கம் என்ற கத்திரி, கொங்குமந்தாரை, வலம்புரி என்ற நந்தியாவர்த்தம், செங்கீரை, அணிச்சம், செம்பரத்தை என்ற பதினெட்டு வகை நிலப்பூ வகைகள் கூறப்பட்டுள்ளன.

அஷ்ட புஷ்பம் / எண்மலர்கள் :

அர்க்க சம்பக புன்னாக நந்தியாவர்த்தச பாடலீ
பிருஹதீ கரவீராணி துரோண புஷ்பாணி சார்ச்சயேத் (காரணகமம்)

வெள்ளெருக்கம்பூ, செண்பகப்பூ, கொன்றைப்புன்னை, நந்தியாவட்டை, பாதிரி, கண்டங்-கத்திரி, அரளி, தும்பை என்ற எட்டுவகையாம், அம்சுமதாகமம் மற்றொரு வகையான அஷ்டபுஷ்பங்களைக் கூறுகிறது. அவை.

பங்கஜார்க்க பலாசம்ச நந்தியாவர்த்தம்ச மல்லிகா
கரவீரம் பகம் சைவ நீலோத்பல மதாஷ்டகம். (அம்சுமதாகமம்)

என கூறுவதால் தாமரை, புரசு, நந்தியாவட்டை, எருக்கு, மல்லிகை, அரளி, கொக்குமந்தாரை, நீலோத்பலம் என எட்டு புஷ்பங்களையும் நாம் அறியமுடிகிறது. மேற்கண்ட மலர்கள் அஷ்டபுஷ்பம் என்ற பெருமைவாய்ந்ததாக எல்லா காலங்களிலும் இறைவனுக்கு மந்திரத்தால் சமா்ப்பிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு காலங்களிலும், அதாவது காலசந்தி, உச்சிகாலம், சாயரட்சைஷ என முக்காலங்களிலும், அர்த்தயாமத்திலும் சாற்ற வேண்டிய புஷ்பங்களை பல்வேறு விதமாக பல ஆகமங்கள் எடுத்து இயம்புகின்றன.

பங்கஜம்ச பலாசம்ச துளசீ நவமல்லிகா.
நந்தியாவர்தம்ச மந்தாரம் மாதவீ சம்பகம் ததா.
புன்னாகம் கேதகீ சாபி ப்ராத: காலார்சனேதச. (காரணாகமம்)
நத்தியாவர்த்தம் சிரியாவர்த்தம் சுவேதார்க்கம் உதயேததேத் (சிவதருமம்)

மேற்கண்ட காரணாகமத்தின்படி தாமரை, புரசம்பூ, துளசி, நவமல்லிகை, நந்தியாவட்டை, மந்தாரை, முல்லை, செண்பகப்பூ, கொன்றைப்பூ, தாழம்பூ என பத்துவிதமான புஷ்பங்கள் கூறப்படுகின்றன. அருணகிரிபுராண கதையின் வாயிலாக தற்போது தாழம்பூ சாற்றுவது நடைமுறையில் இல்லை. ஆயினும் அர்த்தயாமத்தில் சாத்துவதாக சான்றோர் கூறுகின்றனர். சிவதா்மவாக்கியப்படி நந்தியாவர்த்தம், ஸ்ரீயாவர்த்தம், வெந்தாமரை இவைகளை உதயகாலத்தில் சாற்றவேண்டும் என அறிகின்றோம். மேலும் சைவாகமங்களை ஆராய்ந்து, நுண்ணியதமிழ் ஞானம் பெற்ற தருமையாதீன முதலாம் பீடாதிபதி கமலைஞானபிரகாசர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வம்பவி ழலரிநா யுருவி மல்லிகை
வெம்பிய வெருக்குடம் வில்வம் வெண்மலர்
நம்பிய வருக்கலர் நந்தி நாண்மலூ
ரம்புயங் காலையி லட்ட புட்பமே

என்பதால் அரளி, நாயுருவி, மல்லிகை, எருக்கு, வில்வம், நந்தியாவட்டை, தாமரை மேலும் ஒரு வெண்ணிறப்பூ சேர்த்து காலை பூஜையின் எட்டுவிதமான புஷ்பங்களைக் கூறுவதை காணலாம்.

மாத்யான்ஹ பூஜைக்கு உரிய மலர்கள் (மாத்யான்ஹ புஷ்பம்) :

சுவேதாப்ஜம் கரவீரம் ச பாலாசம் துளசீ ததா.
உத்பலம் பில்வபத்ரம் ச சங்கம் குரவகம் ததா.
கோவிதாரம் சைகபத்ரம் தச மாத்யான்ஹ பூஜனே. (காரணாகமம்)
கரவீரம் ச பத்மம் ச துரோணம் மத்யாண்ஹகே ஹிதம். (சிவதருமம்)

என்று கூறுவதால், வெண்தாமரை, அரளி, புரசு, துளசி, அல்லி (நெய்தல்), வில்வம், சங்கு, மருதாணி, கோவிதாரம் (நாட்டுஅகத்தி), ஓரிதழ்தாமரை என பத்துவகையான புஷ்பங்களை உச்சிகாலப்பொழுதில் சாற்றவேண்டும் என காரணாகமமும், செவ்வரளி, தாமரை, தும்பை இம்மூன்றையும் உச்சிப்பொழுதில் சிவபெருமானுக்கு அர்ப்பிப்பது நன்மை என சிவதர்மமும் கூறுகிறது.

போதவிழ் பொன்னூமத்தை புலிநகக் கொன்றை வெள்ளைப்
பாதிரி வன்னி செய்ய வழுதுணை படர்மந்தாரை
பேதமாய் மலரும் வெள்ளைக்காக் கொன்றை பெரிய தும்பை
யோதிக விவைக ளெட்டு முச்சியி லட்ட புட்பம்.

என்ற தமிழ்ப்பாடல் மூலம் 1) பொன்னூமத்தை, 2) புலிநகக்கொன்றை, 3) வெள்ளைப்பாதிரிப்பூ, 4) வன்னிப்பூ, 5) கத்திரி, 6) மந்தாரை, 7) வெண்டாமரை, 8) தும்பை என எட்டுவிதமான புஷ்பங்கள் உச்சிகால பூஜைக்கு உரியவை என தெரிகிறது.

ஸாயங்கால பூஜைக்கு உரிய மலர்கள் (ஸாயன்ஹ புஷ்பம்)

ரக்தாப்ஜம் குமுதம் சைவ மல்லிகா ஜாதி மாலதீ
மரூர் தமனம் வா பி பேரகம் கஜகர்ணிகா
துளசி பில்வ பத்ரம்ச ஸாயங் காலர்ச்சனே தச. (காரணாகமம்)

....

மல்லிகா கிருஷ்ண துத்தூரம் ஸாயான்ஹேசம்பகம் ஹிதம்
கதம்ப கனகா ஜாதி கர்ணிகா சார்த்தராத்ரிகே. (சிவதருமம்)

ஸாயங்கால பூஜைமலர்கள், 1) செந்தாமரை, 2) அல்லி, 3) மல்லிகை, 4) ஜாதிமுல்லை, 5) மரமல்லிகை, 6) மருக்கொழுந்து, 7) வெட்டிவேர், 8) கஜகர்ணிகை, 9) துளசீ, 10) வில்வம், என்ற பத்துவகைப்படும். மேலும் சிவதரு;மத்தின்படி, கருஊமத்தை, மல்லிகை, செண்பகம் இவைகளை மாலையிலும், கதம்பம், பொன்னிறமலர், ஜாதிமுல்லை இவற்றை அர்த்தயாமத்திலும் சமர்ப்பிக்கவேண்டும்.

வந்தமல் லிகையி ரண்டு மகிழ்தரு மல்லிகைப் பூக்
கொத்துவேர் சண்ப கப்பூச் சிறியசண் பகங்கொழுந்து
சிந்தைகூ ரட்ட புட்பஞ் சிவன்முடிக் கேறும் போழ்தில்
லந்தியோ டர்த்த யாம மபராணந்த தனினு மாமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பாடலின்படி மல்லிகை, காட்டுமல்லி, மரமல்லிகை, மகிழம்பூ, வெட்டிவேர், செண்பகம், சிறுசெண்பகம், மருக்கொழுந்து என்ற எட்டும், அந்தி, அர்த்தயாமம், பிற்பகல் ஆகிய காலங்களில் சிவன் முடிக்கேற்ற மலர்கள் ஆகும்.

ஆவாஹநார்க்ய பூஜாஸு ஸ்நானேதூபே விலேபநே.
நிவேத்யச விஸர்கேச புஷ்பாஷ்டௌது ஸுயோஜயேத்.

1) ஆவாஹனம், 2)அர்க்யம், 3) பூஜை, 4) ஸ்நானம், 5) தூபமிடுதல், 6) நறுமண திரவியம் பூசுதல், 7) நிவேதனம், 8) விடை கொடுத்தல் ஆகிய செய்கைகளின் பொழுது சிறப்பாக அஷ்டபுஷ்பார்ச்சனம் செய்தல் வேண்டும்.

மாத புஷ்பங்கள் மற்றும் பத்ரங்கள்

1). சித்திரை மாதத்தில் முல்லைப்பூ, கானார்ப்பூ, கடம்பன்பூ, வாழைப்பூ, கோங்குஅறுகு. நாயுருவி, விளா, வில்வம் இவைகளால் பூஜித்தால் லட்சுமீகரம் ஏற்படும்.

2) வைகாசியில் அரளி, செந்தாமரைப்பூ, பாதிரிப்பூ, நெருஞ்சில்பூ, சிறுவழுதலைப்பூ, செவ்வகந்திப்பூ இவைகளுடன் வன்னிபத்ரம் மற்றும் அறுகு, நாயுருவி, நொச்சி, விளா, வில்வம் இவைகளால் அர்ச்சித்தால் சிவலோகம் கிட்டும்.

3) ஆனி மாதத்தில் கடம்பப்பூ, சிவப்புசெண்பகப்பூ, தாமரைப்பூ, பாதிரிப்பூ. காக்கட்டான்பூ, இப்பூக்களை அர்ச்சிக்கலாம். மேலும் இம்மாதத்தில் விசேஷமாக அபிஷேக த்ரவ்யமான புஷ்போதகத்தில், புன்னைப்பூ, நாகமல்லி, நந்தியாவட்டை, கருஊமத்தைப்பூ, வெள்ளெருக்கம்பூ, மகிழம்பூ, என்பனவாம். இதன்மூலம் எண்ணியபலன் சித்திக்கும்.

4) ஆடிமாதத்தில் ஊமத்தம்பூ, கருங்குவளை இவைகளுடன் வில்வபத்ரமும் சேர்த்து அர்ச்சித்தால் பலனாக சத்ருநாசம் அடையலாம்.

5) ஆவணி மாதத்தில் விஷ்ணுகிராந்தி, காக்கட்டான்பூ, மல்லிகை, புன்னைப்பூ, செண்பகம், முல்லை இவைகளுடன் ஆல்பத்ரம் அர்ச்சித்தால் பூவுலக மகிழ்ச்சியை அடையலாம்.

6) புரட்டாசி மாதத்தில் தேவதாரு, விஷ்ணுகிராந்தி, பொன்னுமத்தை, வெள்ளெருக்கு, தாமரை இவைகளுடன்,சிறுசெண்பகபத்ரம் செய்கையில் மூலம் அர்ச்சனை செல்வச்சேர்க்கை ஏற்படும்.

7) ஐப்பசியில் சங்கப்புஷ்பம், வில்வப்புஷ்பம், சிறுவழுதலைப்பூ, சரக்கொன்னைப்பூ, மகிழம்பூ, பட்டிப்பூ, முல்லைப்பூ இவைகளுடன் தாமரைபத்ரம் சேர்த்து அர்ச்சித்தலால், தர்ம அர்த்த காம மோட்சம் ஆகிய நான்கையும் அடையலாம்.

8) கார்த்திகை மாதத்தில் குடமல்லி, கருநெய்தல், மல்லிகைப்பூ, வில்வப்பூ, பலாசம்பூ, பாக்குப்பூ இப்பூக்களுடன் குருக்கத்திபத்திரம் கொண்டு பூஜை செய்கையில், பிரம்மஹத்தியாதி தோஷ நிவாரணம் கிடைக்கும்.

9) மார்கழி மாதத்தில் தும்பைப்பூ, வெள்ளறுகு, வெண்தாமரை, செந்தாமரை இப்பூக்களுடன் அறுகுபத்ரம் மூலம் அர்ச்சனை செய்கையில் மோக்ஷம் உண்டாகும்.

10. தை மாதத்தில் ஒற்றை நந்தியாவட்டை, இரட்டை நந்தியாவட்டை இவைகளுடன் அறுகு பத்ரம் மூலம் அர்ச்சனை செய்தால் ஆயுள் விருத்தி உண்டாகும்.

11. மாசியில் தாமரை, மருதாணி, மல்லிகைப்பூ இவைகளுடன் துளசீபத்ரம் மூலம் அர்ச்சனை செய்கையில் நல்ஆரோக்கியம் ஏற்படும்.

12. பங்குனி மாதத்தில், தாமரைப்பூ, காசித்தும்மைப்பூ, இவ்வகைப்பூக்களுடன் நாகமல்லி, பத்தரம் மூலம் அர்ச்சனை செய்தால் ஐஸ்வர்யம் உண்டாகும். மேலும் பங்குனி மாதத்தில் விசேஷமாக புஷ்பபூஜா சொல்லப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாத புஷ்ப ஸமோபேதையர் சம்ப கோத்பல ஜாதிபி :
நீலோத்பல ப்ரசூநைச்ச பூர்வோக்த புஷ்ப ஜாதிபி :
புஷ்பைர் பத்ரைர் ஸமாஹ்றுத்ய ஸம்பதம் ஸம்ய காசரேத்.
லிங்கம் ஆபூரயேத் வித்வான் உக்தபுஷ்பைர் விசேஷத :
லிங்க மூர்த்தாதி பீடாந்தம் ஸ்தலாந்தம்வா ஸமாசரேத். (காரணாகமம்)

எனும் காரணாகம வசனப்படி செண்பகப்பூ, நெய்தல் (அல்லி), நீலோத்பலம், முதலிய புஷ்பங்களையும், பத்ரங்களையும் நன்கு சேகரித்து, முறைப்படி ஸ்நபனம் எனும் முதலான பூஜைகளை செய்து சிவாக்னியில் புஷ்பங்களை சம்பாதம் செய்து, லிங்கவடிவிலான மூர்த்தியை புஷ்பங்களாலே அபிஷேகிக்கவேண்டும். அந்தப் புஷ்பாஞ்சலியானது பிரம்மபாகம்வரை அதாவது, பீடம் வரை மறைத்தோ அல்லது ருத்ரபாகம் மட்டில் மறைத்தோ, புஷ்பாஞ்சலியை முறைப்படி செய்து, நிவேதனம் முதலான உபசாரங்கள் செய்தால் விரும்பியபலனை அடையலாம், மாத பூஜையில் ஆனிமாத புஷ்போதகம் மற்றும் பங்குனிமாத புஷ்பபூஜா இவ்விரண்டும்மிகச் சிறப்பாகஆகமங்கள் புஷ்பத்தின் உயர்வை தெரிவிக்கின்றன..

1. துத்தூரம் கரவீர ஜாதி வகுளம் மந்தார புஷ்பம் பகம்.
புன்னாகம் குரவார்க்க நந்தி குடஜ துரோணாதிகம் மாதவீ.
சுப்ரம் ஸாத்விக மேத துக்த மகிலம் மோக்ஷப்ரதம் ஸ்யாத் தது.
கல்ஹா ராம்புஜ பட்டி பாடல கமம் பாலாச நீபாதி யத் (அதிதாகமம்)

வெள்ளைஊமத்தம்பூ, வெள்ளை அரளி, பிச்சிப்பூ, சிறுசெண்பகம், மகிழம், வெள்ளை மந்தாரை, வெந்தாமரைப்பூ. வெள்ளைக்கொக்கிறகம்பூ, புன்னை, மருதாணி, வெள்ளெருக்கு, நந்தியாவட்டை, மல்லிகை, குடமல்லிகை, தும்பை, முல்லை முதலியன வெள்ளை புஷ்பங்களை சாற்றுவது நன்மை, இவற்றால் ஸ்ரீ மகாதேவருககு அர்ச்சனை செய்யின், முக்தியுண்டாகும். செங்கழுநீர், செந்தாமரை, செவ்வரளி, சிவந்தபட்டி, சிவந்தபாதிரி, சிவந்தபவாசம், செங்கடம்பு முதலிய சிவந்த புஷ்பங்களனைத்தும் இராஜஸபுஷ்பங்களாகும். இவற்றால் ஸ்ரீ மகாதேவருக்கு அர்ச்சனை செய்யின் போகமுண்டாகும்.

11. ரத்தம் ராஜஸ மேவ முக்த மஜிதே தைரர்ச்சனம் போகதம்
ஸர்வம் கிருஷ்ண சுமம்து தாமஸ மதோ அயோக்யம் விநா சோத்பலம்
பீதம் ஸாத்விக ராஜஸம் ஸகலமப் யாரக்வதம் சம்பகம்
துத்தூராதிச கர்ணிகார மபியத் ஸ்யாத் போகமோக்ஷ ப்ரதம் (அஜிதாகமம்)

1) நீலோத்பலம் நீங்கிய ஏனைய கருநிறமுள்ள புஷ்பங்களனைத்தும் தாமஸ புஷ்பங்களாகும் இவை சிவனை அர்ச்சித்ததற்கு உரியனவாகா.

2) கொன்றை, செண்பகம், பொன்னூமத்தம், கர்ணிகாரம் முதலான பொன்மயமான மஞ்சள்நிற புஷ்பங்களனைத்தும் ராஜஸ ஸாத்வீக புஷ்பங்களாகும். இவற்றால் ஸ்ரீ மகாதேவருக்கு அர்ச்சனை செய்யின் போகம், மோக்ஷம் என்னுமிரண்டும் உண்டாகும்.

11. சியாமம் தாமஸ ராஜஸம்ஹி துளசீ பில்வாதி பத்ரம்ச யத்.
ஹரீபேரம் மருகம்ததா தமனகம் தூர்வாச ஸித்தித்வயாம்.
ஸாஹஸ்ராத் கரவீரமர்க் குகமான் பில்வம் சுமம்தம்ளம்.
சுவேதாப்ஜம் சதபத்ரமத்ர கமலம் தஸ்மாத் அபாமார்கமம்.

1) வில்வபத்ரம், பச்சை, துளசி, வெட்டிவேர், மருக்கொழுந்து, அருகு, கதிர்ப்பச்சை முதலியன புதிய பத்ரங்களனைத்தும் தாமஸ இராஜஸ பத்ரங்களாகும். இவற்றால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்யின் போகம் மோக்ஷம் இரண்டும் உண்டாகும். இவ்வாறு அஜிதாகமத்தில் கூறப்பட்டு இருக்கின்ற முறையினை அறிந்து சிவபெருமானை அர்ச்சித்தால் மேற்கண்ட பலன் உண்டாகும்.

பூக்களின் அதிதேவர்கள், கொங்கம்பூவில் சரஸ்வதியும், அலரிப்பூவில் பிரம்மாவும், வன்னியில் அக்னியும், நந்தியாவர்த்தையில் நந்திதேவரும், புன்னைப்பூவில் வாயுதேவரும், எருக்கில் சூரியனும், செண்பகப்பூவில் சுப்ரமண்யரும், வில்வத்தில் இலக்குமியும், கொக்கிறகம் பூவில் விஷ்ணுவும், மாவிலங்கையில் வருணனும், மகிழில் சரஸ்வதியும், வாகையில் நிருதியும், ஜாதிப்பூவில் ஈசானனும், செங்கழுநீரில் சூரியனும், குமுதம்பூவில் சந்திரனும், மந்தாரையில் இந்திரனும், மதுமந்தையில் குபேரனும், நாயுருவியில் யமனும், தாமரைப்பூவில் சிவனும், அறுகில் விநாயகரும், நீலோற்பலத்திலும், ஏனைய வாசனைப்புஷ்பங்களிலும் உமாதேவியாரும், அதிதேவதைகளாய் இருப்பார்கள். ஆகையால் இவை முதலிய மந்திரபுஷ்பங்களை உண்டு பண்ணியவர்களும், விதிப்படி எடுத்துக்கொடுத்தவர்களும் அவைகளால் அர்ச்சித்தவர்களும் போக மோக்ஷங்களை அடைவார்கள் என்று ஆகம நூல்கள் கூறுகின்றன.

தஸ்மாத் தர்ப சுமந்து மாலதி சுமம் வ்யாக்ராதி தஸ்மாத் பகம்
துத்தூரம் து தத்ஸஹஸ்ர மதிகம் துரோணம் ஹி சங்கம் தத:
பஞ்சாசத் சதபங்க்திதஸ் ஸமதிகம் துரோணம் பிருஹத் சோத்பலம்
ஸர்வஸ்மாத் அதிகம் ஹி பக்தி குசுமம் ப்ரோக்தம்ச காலோத்தரே.

(காலோத்தராகமம்)

மேற்கண்ட காலோத்ர சுலோகத்தினால் ஸ்ரீ பரமேஸ்வரர் முருகப்பெருமானுக்கு அருளிய காலோத்தரம் மற்றும் அருள்உள்ளம் கொண்டு அருளிய மகுடாகம வசனங்களாலும் மலர்களுக்கு உரிய புஷ்பதாரதம்மியம் பின்வருமாறு, ஸாமான்ய புஷ்பங்களைக்காட்டிலும், ஒரு அலரிப்புஷ்பம் அதிகம், அந்த அலரிப்புஷ்பம் ஆயிரத்தினும் ஒரு வெள்ளெருக்கம்புஷ்பம் அதிகம். அதனினும் அதிகம் வில்வப்புஷ்பம். அதில் ஆயிரத்தினுமதிகம் மூன்றுகிளையோடு கூடிய ஒரு வில்வ இலை. அதன் ஆயிரத்தினுமதிகம் ஒரு வெண்டாமரைப்புஷ்பம். அதில் ஆயிரத்தினுமதிகம் நூறு இதழோடு கூடிய ஒரு செந்தாமரைப்புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு தர்ப்பைப்புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு முல்லைப்புஷ்பம், அதன் ஆயிரத்தினும் அதிகம் ஒரு கண்டங்கத்திரிப்புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு ஊமத்தம்புஷ்பம். அதில் ஆயிரத்தினுமதிகம் ஒரு தும்பைப்புஷ்பம். அதன் ஆயிரத்தினும் அதிகம் ஒரு சங்கு புஷ்பம், அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு பெருந்தும்பை புஷ்பம். அது ஒரு வருடத்திற்கு நிர்மால்யமாவதில்லை. புஷ்பஜாதிக்குள் நீலோற்பலம் அதிகம். பத்திரஜாதிக்குள் மருக்கொழுந்து அதிகம். அதனினுமதிகம் வில்வபத்திரம் என்று அறிந்துகொள்க.

கருநெய்தல்மலர் மகிமை (நீலோத்பலபுஷ்பவிசேஷம்)

ஸர்வேஷாம் புஷ்பஜாதீநாம் ப்ரவரம் நீலமுத்பலம்.
நீலோத்பல ஸமம் புஷ்பம் ந பூதம் ந ப விஷ்யதி.
நீலோத்பல ஸஹஸ்ரேப்யோ பக்திரேவ விவிஷ்யதே. (காலோத்தரம்)

என்பதனால்,எல்லா புஷ்பங்களைக் காட்டிலும் உயர்ந்தது. நீலோத்பலமலர் ஆகும். அதைக்காட்டிலும் மேலான புஷ்பம் மூவுலகிலும் ஏதுமில்லை. அப்படிப்பூ ஒன்று உண்டெனில் நாம் செலுத்தும் பக்தியே (அன்புமலரே) ஆகும்.

கோயில்களும், நந்தவனங்களும் மனஅமைதிக்காகவும், அழகுக்காகவும் ஏற்பட்டவை அல்ல. ஒவ்வொரு பகுதியிலும் வாழும், மக்களுக்குத்தோன்றும் நோய்களின் நிலைக்கேற்ப, பல கடவுள் உருவங்கள் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மூலிகையையும் வழிபாட்டு மூலிகையாகப் பயன்படுத்தி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவனின் பெயரால், மக்களுக்கு தொற்றுநோய் ஏற்படாமலும் இருந்திட பாதுகாப்பு செய்யப்பட்டன. இவற்றை மூட நம்பிக்கை என ஒதுக்காமல், மருத்துவ அறிவியல் ரீதியாக ஆய்வு செய்தால், முன்னோர்களின் அறிவியல்பூர்வ, நம்பிக்கையின் வெளிப்பாடே, கோயில்கள் என நிரூபிக்க முடியும்.

வாழ்க்கையில், மணம்பரப்பி, மேன்மைதரும் மலர்களுக்கு, நெஞ்சை அள்ளும் கொள்ளை அழகு, மணம்கமழும் நறுமணம், நோய்தீர்க்கும் மருத்துவகுணம், இறையருளை வாரிவழங்கும் தன்மை என மகத்துவங்கள் ஏராளம்.

அன்பு, பக்தி, நம்பிக்கை, ஆனந்தம் போன்ற நல்லகுணங்களை, நம்மனதில் உண்டாக்கி, ஆன்மீகப்பாதையில் உயர்வு உள்ளவர்களாக மாற்றும் சக்தி மலர்களுக்கு உண்டு. அதே போன்று, மூலிகைகளின் மருத்துவகுணங்களுடன், தோல்நோய், மலேரியா, சுரம் போன்றவற்றைக் கட்டுப்படுத்தி குணப்படுத்தும் ஆற்றல் உடையவனவாகவும், மலர்கள் விளங்குகின்றன.

சிவார்ச்சனை சந்திரிகா : உயர்ந்தபுஷ்பங்களை மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டும். மிருகீமுத்திரை செய்துகொண்டும் அர்ச்சிக்கவேண்டும். அவையாவன. தும்பைப்பூ, சுரபுன்னை, மந்தாரம், நந்தியாவர்த்தம், ஸ்ரீயாவர்த்தம், அலரி, எருக்கு, மகிழம்பூ, மருதாணி, வெள்ளை-லொத்தி, நூறு இதழுடைய தாமரை, ஊமத்தை, பலாசம், பாடலம், சண்பம், கொன்றை, கர்ணிகாரம், கும்முட்டி, மாதுளை, மருதம், மயிற்கொன்றை, தேவதாரு, பச்சிலைமரம், முன்னை, மருக்கொழுந்து, அசோகம், பத்ரா, அபராஜிதம், ஆயிரம் இதழுடைய தாமரை, செங்கழுநீர், செந்தாமரை, நீலோற்பலம், குசும்பம், குங்குமமரம், மலைமல்லி, தருப்பை, நாயுருவி, கையாந்தாமரை, கமுகு, சரளம், மலையத்தி, கடம்பபம், மா. இலுப்பை, நாகம், ஹோமகுலி, குன்றிச் செடி, நிலப்பனை, வேஜிகை, ஜாதிமல்லி, பட்டி, மாலதி, ரித்தி, நொச்சி, விஷ்ணுகிராந்தி, வாழை, நன்னாரி, தேவதாளம், தவிகண்டி, கிரந்தபர்ணி என்னும் இவற்றால் செய்யப்படும் பூஜைகளாகும்.

ஒவ்வொரு வர்ணமுடைய புஷ்பங்களாற் தனித்தனியாக கட்டப்பெற்ற மாலைகள் உத்தமம், அநேக வர்ணமுடைய புஷ்பங்களைக்கொண்டு கட்டப்பட்ட மாலைகள் மத்தியம், இலையும், பூவும் கலந்து கட்டப்பட்ட மாலைகள் அதமம்.

எருக்கு, அலரி, வில்வம், கந்தபத்ரிகா, வெண்தாமரை, நூறு இதழுடைய தாமரை, ஆயிரம் இதழுடைய தாமரை, கொக்குமந்தாரை, ஊமத்தை, தும்பை, நாயுருவி, தருப்பை, வன்னி, கொன்றை, சங்கம், கண்டங்கத்திரி, சதபத்ரா, மிளகுச்செடி, நொச்சிக்கொடி, வெள்ளெருக்கு, பெருந்தும்பை, நீலோத்பலம் என்னுமிவை முறையே ஒன்றிற்கொன்று ஆயிரமடங்கு அதிகமான பலனைத்தருவனவாம். அவற்றுள் எருக்கம்பூ, பத்துச்சுவர்ணத்தைத் தானம் செய்ததோடொக்கும், நீலோற்பலம் ஆயிரம் சுவர்ணபுஷ்பத்தால் அர்ச்சனை செய்ததோடொக்கும், துளசி, கருந்துளசி, இந்திவல்லி, விஷ்ணுகிராந்தி, நன்னாரி, குங்குமம், கரும்புன என்னும் இவற்றின் பூக்கள் எருக்கம்பூவுக்கு சமமாகும். நந்தியாவர்த்தம், விஜயம் நூறு இதழுடைய தாமரை, மந்தாரம், மா, இலுப்பை, வெள்ளைவிஷ்ணுகிராந்தி, சிறுசெண்பகம், கதலி, நன்னாரி என்னும் இவற்றின் பூக்கள் அலரிப்பூவுக்கொப்பாகும். ரித்தி என்னும் ஓஷதி, சகதேவி, நாகநந்தி, செண்பகமென்னுமிவற்றின் பூக்கள் வில்வதளத்திற்கு ஒக்கும், பாதிரிப்பூவும், மகிழம்பூவும், தாமரைப்பூவும், தும்பைப்பூவுக்கு ஜாதி, மல்லிகை, இலுப்பை, சங்கம், நாகம், சூரியாவர்த்தம், சிங்ககேசரம், மகாபத்திரம் முதலியவற்றின் புஷ்பங்கள் நாயுருவியின் பூவுக்கொப்பாகும். அசோகம், வெள்ளை, மந்தாரம், என்னும் இவற்றின் பூக்களும், ஏழுநாட்களில் விருத்தியடைந்த வால்நெல், கோதுமை, நீவாரம், நெல், மூங்கிலரிசி, மஞ்சாடி, பயிறு, மொச்சை, விலாமிச்சை, உளுந்து என்னுமிவற்றின் முளைகளும் கொன்றைப்பூவுக்கொப்பாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைரம், பத்மராகம், மரகதம், நல்முத்து, இந்திரநீலம், மகா நீலம், சூரியகாந்தம், சந்திராந்தம் ஆகிய இரத்தினபுஷ்பங்களும், ஆயிரம் சுவர்ணபுஷ்பங்களும், சிறந்ததென்பது எல்லா ஆகமங்களின்றுணிபு. சில ஆகமங்களில் அலரி சிறந்ததென்றும், வேறு சில ஆகமங்களில் கொக்குமந்தாரை சிறந்ததென்றும், இன்னுமோராகமத்தில் மலைப்பூ எல்லாவற்றினும் சிறந்ததென்றும் கூறபட்டிருக்கின்றன. சிலர் எல்லாப்பூக்களினும் தாமரைப்பூவே சிறந்ததெனக் கூறுகின்றனர். ஆனால், காலவிசேடத்தை அநுசரித்து, புஷ்பவிசேடத்துப் பெருமையுண்டு எவ்வாறு என்று கூறுகையில், கடம்பம், செண்பகம், செங்கழுநீர், புன்னாகம், தருப்பை, கண்டங்கத்திரி யென்னும் இந்தப்புஷ்பங்களால் அர்ச்சனை செய்யின் அசுவமேதயாகஞ்செய்த பலனைத் தரும் பாடலி புஷ்பம், மல்லிகைப்பூ, நூறு இதழுடைய தாமரைப்புஷ்பம், என்னுமிவற்றால் கிரீஷ்டோமம் செய்த பலனைத்தரும். தாமரை, மல்லிகையென்னும் இவற்றின் புஷ்பங்களால் வருஷ ருதுவாகிய ஆவணி, புரட்டாசி, மாதங்களில் சிவபெருமானை அர்ச்சனை செய்யின் அசுவமேதயாகஞ்செய்த பலனைத்தரும், ஊமத்தை, செங்கழுநீர், சுஜாதம், நீலோத்பலம் என்னுமிவற்றின் புஷ்பங்களால் சரத்ருதுவாகிய ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் சிவபெருமானை அர்ச்சனை செய்யின் சத்திரயாகஞ்செய்த பலனைத்தரும். அலரி, சுஜாதம், நீலோற்பலம் என்னும் இவற்றின் புஷ்பங்களால் ஹேமந்தருதுவான மார்கழி, தை மாதங்களில் சிவபெருமானை அர்ச்சனை செய்யின் நூறு யாகஞ்செய்த பலனைத்தரும். கர்ணிகாரப் புஷ்பத்தால் சிசிரருதுவாகிய மாசி, பங்குனி மாதங்களில் சிவபெருமானை அர்ச்சனை செய்யின் எல்லா யாகஞ்செய்த பலனைத் தரும்.

அவ்வாறே, ஆனி முதலிய பன்னிரண்டு மாதங்களிலும் முறையே எருக்கு, வில்வம், நாயுருவி, தும்பை, நீலோற்பலம், தாமரை, கொன்றை, கண்டங்கத்திரி, வியாக்கிரம், வன்னி, செண்பகம், பாடலம், என்னுமிவற்றின் பூக்கள் சிறந்தனவாகும். அவ்வாறே நந்தியாவர்த்தம், ஸ்ரீயாவர்த்தம், வெள்ளெருக்கு, வெண்டாமரை, புரசு, புன்னாகம், சிறுசண்பகம், பட்டி, சிவந்த அகஸ்தியம், மகிழம், ரித்தி என்னும் ஒஷதி, திவிகண்டி, வேதிகை, பாடலம், அசோகம், கதலி, சங்கினியென்னுமிவற்றின் புஷ்பங்கள் பிராதக்கால பூஜையில் மிகவுஞ்சிறந்தனவாகும்.

தும்பை, அலரி, கொன்றை, ஊமத்தம், வியாக்கிரம், கண்டங்கத்திரி, பாடலம், தாமரை, நீலோற்பலம், செண்பகம், குரண்டெமென்னும் இவற்றின் பூக்கள் உச்சிக்காலப்பூஜையில் மிகவுஞ்சிறந்தனவாகும். ஜாதி, நீலோற்பலம், கடம்பம், ரோஜா, தாழை, கமுகு, புன்னாகம், தந்தி என்னும் இவற்றின் பூக்களும், ஊமத்தையின் புஷ்பமும், குருவேரும், வில்வமுமாகிய இவை அர்த்தராத்திரி பூஜையில் மிகவுஞ்சிறந்தனவாகும், கடம்பம், ஊமத்தை, ஜாதியென்னும்மிவற்றை இரவிற்றான் சமர்ப்பிக் வேண்டும். குருக்கத்தி, ஆனந்ததிகா, மதயந்திகை, வாகை, ஆச்சா, உத்திக்திலகம், ஆமல், மாதுளை, தென்னை அல்லது நீர்த்திப்பிலி, குழுமும், பருத்தி, வேம்பு, பசகணி, இலவு. சிந்தித, வோட, மலைஆல், பொன்னாங்கண்ணி, விளா, புளியென்னுமிவற்றின் பூக்கள் விலக்கத்தக்கவை ஆகும். தாழம்பூவை விலக்கிய விலக்கானது அர்த்தராத்தியிற்றவிர ஏனைய காலங்களிற்றான் உபயோகம். அதாவது அர்த்தராத்தியில் மாத்திரம் தாழம்பூவை உபயோகிக்கலாம் என்பதாம்.

கடம்பப்பூவைப் பகற்காலத்துபயோகிக்கக்கூடாது. கிரிகர்ணிகையை விலக்கிய விலக்கானது. நீலகிரிகர்ணிகையில் உபயோகம். அதாவது நீலகிரிகர்ணிகை அர்ச்சனைக்கு ஆகாதென்பதாம். பலாசம் கூடாதென்ற விலக்கை முள்ளுள்ள பலாசத்திற்கு மட்டுங்கொள்ளல் வேண்டும். இவ்வாறே ஜவாபுஷ்பம்(செவ்வரத்தம்பூ) மகிழம்பூ என்னுமிவை சில ஆகமங்களில் விதிக்கப்பட்டும், சில ஆகமங்களில் விலக்கப்பட:டுமிருக்கின்றன. கூடும், கூடாதென்ற இவற்றின் முடிவைப்பலத்தின் பேதத்தை அநுசரித்து பூஜையின் பேதத்தாலும், அவரவர்களின் முன்னோர்கள் அநுட்டித்துவந்த ஆகமத்தை அநுசரிக்கும் பூஜையின் பேதத்தாலும், பூஜிக்கப்படும் மூர்த்தியின் பேதத்தாலும் நிர்ணயித்துக்கொள்ளலாம். விலக்கப்பட்ட பூக்களை மண்டபத்தை அலங்கதரிப்பதற்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புஷ்பம் சாற்றும் முறைகள்

கநிஷ்டா நாமிகா மத்யே நவபுஷ்பம் துஸங்கிரஹேத்.
அங்குஷ்ட தர்ஜநீப்யாம் து நிர்மால்யம்ச விஸர்ஜயேத்.
விஸர்ஜனஸ்ய தத்காலே புஷ்பம் மூர்த்திச விந்யஸேத். (சூக்ஷ்மாகமம்)

கனிஷ்டை, அனாமிகை விரல்களுடைய மத்தியில் புஷ்பத்தை வைத்துக்கொண்டு. அங்குஷ்டம், தர்ஜனீவிரல்களால் நிர்மால்யத்தை விசர்ஜனம் செய்து, விசர்ஜனம் செய்யும் காலத்தில் முன்விரலில் இடுக்கிக்கொண்ட புஷ்பத்தைச் சாத்தவேண்டும் என கூறப்படுகின்றது.

நறை மலர்ப் பொருட்டுநன் னாளம் போக்கியே
குறையுறக் குற்றமாங் கறைப டாவகை
நிறை வுறச் சாத்துக நீரின போதெல்லாம்
பிறவிதழ் போக்கினும் புனித மென்பவே. (புஷ்பவிதி பாடல்)

என்ற பாடலில் பூக்களின் நடுவேயுள்ள, கேசரம், உளை, எனும் பெயர்களையுடைய நூலிழை போன்ற, மலரின் உறுப்பு இல்லாமல் இறைவனுக்குச் சாத்துதல் குற்றமாகும். நீர்ப்பூக்களை அவற்றைக்கவசம் போல மூடியுள்ள புறஇதழ்களை நீக்கிவிட்டுச் சாற்றவேண்டும்.

சேமித்தமலர்களின் உபயோககால அளவு,

பத்மம் து பஞ்ச ராத்ரம் ஸ்யாத் கர வீரம் தினத்ரயம்.
கேதகீ பஞ்சராத்ரம் வைசோத் பலம் துரத்ரிராத்ரகம்.
சம்பகம் சைகராத்ரம் ச கிரிமூலம் தினத்ரயம்.
உசீரம் ஸர்வகாலம் து க்ருஹீதம் உபயுஜ்யதே.

மேற்கண்ட ஆகம சுலோகத்தினால் பூஷ்பங்களை பறித்தப்பின்பு, எத்தனை நாட்களுக்குள் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்பதை அறிவோம். தாமரை ஐந்து நாட்களும், அரளிப்பூ மூன்று நாட்கள் வரையிலும், வில்வம் ஆறுமாதம் வரையிலும், துளசி மூன்று மாதம் வரையிலும், தாழம்பூ ஐந்து நாட்கள் வரையிலும், நெய்தல் (அல்லி) மூன்று நாட்கள் வரையிலும், விஷ்ணுகிராந்தி மூன்று நாட்கள் வரையிலும், விலாமிச்சை எப்போதும் பூஜிக்கலாம். கையில் கொண்டுவந்தது, தானாக விழுந்தது, காய் உடன் கூடிய இலை (ஆமணக்கு இலை) எருக்கு இலைகளில் வைத்த புஷ்பங்களை உபயோகிக்கக்கூடாது. அதேபோன்று வாசனை இல்லாததும், மயிர், புழு, இவைகளால் சூழப்பட்டதும், கடும்வாசனை உடையதும், வாடியனவையும், தகாதவர்களால் தொடப்பட்டதும், அசுத்தமான பாத்திரங்களில் எடுத்துவரபட்டதும். ஈரவஸ்திரத்துடன் கொண்டுவரப்பட்டதும். காய்ந்ததும், பழையதும், பூமியில் விழுந்ததுமான புஷ்பங்கள் கூடா, செண்பக மொக்கு தவிர மற்ற புஷ்பங்களின் மொட்டுகளும் பூஜிக்க ஆகாது, இதனை கீழ்கண்ட பாடலும் உணர்துகிறது.

எடுத்துவைத்தே யலர்ந்தமலர் பழம்பூக்கண் மற்ற
வெருக்கிலையா மணக்கிலை யினிற பொதிந்த பூக்க
ளுடுத்தபுடை வையிற்கரந்தி னமைந்தநறும் பூக்க
ளுதிர்த்திடுபூ வரையின்கீ முற்றவிரைப் பூக்க
ளடுத்தபுழுக் கடியெச்சஞ் சிலந்திமயி ருறுதி
லங்கை யில்லைத் தங்கைகுவித் திடுதல்கங் குறனிலே
யெடுத்தமலர் நீரமிழ்த்தல் புறங்காட்டி லெய்த
லெச்சில்குளி யாதெடுத்த விழிபெனுமா கமமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதன்மூலம் எடுத்துவைத்து உலர்ந்து போன பூ, பழையப் பூ, எருக்கு இலை, ஆமணக்கு இலைகளில் வைக்கப்பட்ட பூக்கள், உடுத்திய துணியில் வைக்கப்பட்ட பூக்கள், வெறுங்கையில் சேர்த்துக்கொள்ளுகிற பூக்கள், உதிர்த்திட்ட பூக்கள், இடுப்பிற்கு கீழாகப்பிடித்து எடுத்துவரப்பட்ட பூக்கள், புழுக்கடி, பறவைகளின் எச்சம், சிலந்தி, தலைமயிர் இவை பொருந்திய பூக்கள், இருகைகளுக்கிடையில் அஞ்சலியாகக் குவித்துப்பிடித்த பூக்கள், இரவில் எடுக்கப்பட்ட பூக்கள், நீரில் ஆடி அமுக்கி எடுக்கப்பட்ட பூக்கள்,சுடுகாட்டிலிருந்து ஆசௌத்துடன் இருக்கும் குளியாதிருந்தும் எடுத்த பூக்கள் இவை பூஜைக்கு ஆகா என ஆகமங்கள் விளக்குகின்றன.

பத்ரம் புஷ்பம் பலம் தேவே நப்ரதத்யாத் அதோமுகம்.,
புஷ்பாஞ்சலௌ நதத்தோஷ: ததார்ப்யுஷிதஸ்யச.

என்பதனால் புஷ்பம், பத்ரம் பழம் இவைகளை அதோமுகமாக சாற்றக்கூடாது. ஆனால் புஷ்பாஞ்சலிக்கு அந்த தோஷம் இல்லை, பழம் புஷ்பத்திற்கும் அந்த தோஷமில்லை.

புஷ்பம் சயதிவா பத்ரம் பலம் நேஷ்ட மதோ முகம்
துக்கதம் தத் ஸமாக்யாதம் யதோத்பன்னம் ததா அர்ப்பயேத்
அதோ முகார்ப்பணம் நேஷ்ட்டம் புஷ்பாஞ்ஜலி விதிம் விநா.
லக்ஷபூஜா திஷ்புனர் புஷ்பம் ஏகைக மர்ப்பயேத்.
ஸமுதாயேந சேத் பூஜா லக்ஷபுஷ்பார் ப்பணம்ந தத்.

புஷ்பங்களையாவது, பத்ரங்களையாவது, பழங்களையாவது பூஜையில் அர்ப்பணம் பண்ணும்போது அவற்றை அதோமுகமாகப் போடக்கூடாது. அப்படிப்போட்டால், துக்கத்தை விளைவிக்கும். அவை, ஸ்வபாவத்தில் மரங்களில் அல்லது செடிகளில் (ஊர்த்துவமுகமாக) இருப்பது போலவே அர்ச்சனையிலும் போட வேண்டும். ஆயினும் இந்த நியமமானது புஷ்பாஞ்சலியில் மட்டும் கிடையாது. அப்போது புஷ்பங்களை இரண்டு கைகளாலும் வாரி எடுத்துப்போடுவதால் இதை அனுஷ்டிக்க முடியாது. புஷ்பங்கள் அனேக ஜாதிகளாக இருந்தால் அந்தந்த ஜாதியை மற்றவைகளுடன். கலக்காமல் உபயோகித்துவிட்டு, பிறகு மற்றொரு ஜாதி புஷ்பத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பூக்களின் பயன் (புஷ்பார்சனாபலம்)

தூர்வா பிராத்ருவதம் ஹரேத் திவிஜவதோ நஸ்யேத் திலைர் ரர்ச்சநாத்

துரோணைர் கோவத நாசஏவஜனனீ ஹிம்ஸாக்ந மாரக்வதம்

அன்யாத் கமனக்ன மர்க்க குசுமம் நீலோத்பலம் வாக்கிருதம்

ஹன்யாத் தோஷமதோ நவக்ரஹகிருதம் தோஷம் தஹேத் குங்குமம் (சிந்தியாகமம்)

அருகம்புல்லாலருச்சித்தால் சகோதரனைக் கொன்ற தோஷம் நீங்கும். தும்பைப் புஷ்பத்தாலருச்சனை செய்யின் பசுக்கொலை செய்த பாவம் நீங்கும். எள்ளுப் பூவினால் அருச்சித்தால் பிராமணரைக்கொன்ற பாவம் நீங்கும். கொன்றைப்பூவால் அருச்சித்தால் தாயாரைக் கொன்ற தோஷம் நீங்கும். வெள்ளெருக்கம் பூவால் அருச்சித்தால் பிறபெண்களைக் கூடின தோஷம் நீங்கும். நீலோத்பல மலரால் அர்ச்சித்தால் வாக்காற் செய்த பாவம் நீங்கும். குங்குமப்பூவால் அர்ச்சனை செய்தால் நவக்ருஹகங் களாலுண்டாகும் பீடை நீங்கும். இவ்வாறு சிந்தியாகமத்தில் கூறப்பட்டிருக்கின்றன. மேலும் மலர்களின் மஹிமையைப் பற்றிய பாடல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எள்ளுநெடும் பிரமகத்தி தன்னை நீக்கு
மிதழிதா யாரைக்கொன்ற வேத நீக்கும்
வெள்ளெருக்குப் பரதார வினைத ணிக்கும்.
வில்வமது பொய்யுரைத்த வெம்மை நீக்குங்
கள்ளுணவு கோங்கம்பூவைப் புனைய நீக்குங்
கத்திரியி னிலைபுனையக் குட்ட நீக்கு
முள்ளியதெல் லாமெய்தும் வறுமை நீக்கு
மொண்டுழாய் மலர்களினு முயற்சி தானே (புஷ்பவிதி)

இப்பாடலில், எள்ளுப்பூ பிரம்மஹத்தி தோஷத்தை நீக்கும், தாயாரைக் கொன்ற பாவத்தை கொன்றைமலர் போக்கும், பிறன் மனைவிழைந்த பாவத்தை வெள்ளெருக்கு நீக்கும், பொய் சொன்ன பாவத்தை வில்வம் போக்கும். கள்ளுண்ட பாவத்தை கொங்கும், குட்டரோகத்தை கத்திரி இலையும், வறுமையைத் துளசியும் போக்கும். பத்ரங்களில் துளசி சிறந்தது.

தும்பைமலர் கோகத்தி தோஷம் நீக்குஞ்
சொன்னநயந் திடுகளவு பலாசு நீக்குஞ்
தம்பிதமை யனைக்கோற லறுகு நீக்குஞ்
சாத்திடுஞ் சந்தனமகா துக்க நீக்கு
மம்புவியிலி லிங்கபின்ன மசோகு நீக்கு
மடைந்தோர்தம் வறுமையெல்லா மான்பா னீக்கும்
வம்பவிழ்நெய் நெல்லியிவை யுரோக நீக்கும்
வளர்நீலோற் பலநீக்கும் வாக்குத்தோஷம் (புஷ்பவதி)

இப்பாடலில், தும்பைப்பூ, கோஹத்தியைப் (பசுவைவதைத்தபாவம்) போக்கும், முருக்கப்பூ, களவு செய்து பாவத்தைகழிக்கும். அருகம்புல் உடன்பிறந்தவரைக் கொன்ற பாவத்தை போக்கும். சந்தன இலை சாத்தினால் துன்பமும் போக்கும். அசோகம்பூ இலிங்கத்தை உடைத்த பாவத்தை நீக்கும். பால் அபிஷேகம் செய்தால் வறுமை தொலையும், நெய்காப்பும், பிணிகளைப்போக்கும், நீலோற்பலம் சொல்லால் வந்த பாவங்களைப்போக்கும்.

பத்ரங்கள், குந்தாக்ய பத்ரம் சுக பத்ரயுக்தம் பில்வம்ச நிர்குண்டிகபித்த பத்ரம் ஏதாதி பஞ்சாபிச பில்வபத்ரைர் வியோமாத்மமந்த்ரைச் சிவமர்ச்சயதே.

முல்லை, கிளுவை, நொச்சி, வில்வம், விலா என்னும் ஐந்து பத்ரங்கள் சூலபத்திரங்கள் என்றும், பஞ்சபில்வம் என்றும் போற்றப்படுபவை, இவற்றால் வ்யோம வ்யாபி பதமந்திரத்தால் சிவனை பூஜித்திட வேண்டும் என்கிறது ஆகமம்.

காரணாகமத்தில் ஏழுகிழமைக்கும் ஏழுஇ லை வாரபத்ரமாக கூறப்படுகிறது. அது, ஞாயிற்றுக்கிழமைகளில் வில்வம், திங்கள்கிழமைகளில் துளசி, செவ்வாய்க்கிழமைகளில் விளா, புதன்கிழமைகளில் மாவிலங்கை, வியாழக்கிழமைகளில் மந்தாரை, வெள்ளிக்கிழமைகளில் நாவற்பத்ரம், சனிக்கிழமைகளில் விஷ்ணுகிராந்தி என வாரப்பத்திரங்கள் ஆகும். இதனைக்கூறும் பாடல்.

கேதாரநாதர்க்குரிய பத்ரவகைகள் (சிவலிங்கப்பூசைக்கேற்றவை)
வில்வமருச் சூதமத்த மாதுளையே நொச்சி
மேவியமுள் நிலந்தைநறுந் கரத்தைசெழு வன்னி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லிய கத்திரி நெல்லி சண்பகமே சாதி
தும்பையொடு மருதுமா மந்தாரை மலரி
யெல்லவரும் புகழுமந்த விஷ்ணுகாந்தி
யெழிற்தேவ தாருவுட னெருக்கறுகென் றுரைக்கு
நல்லனவாம் பத்திரங்க ளிருபத் தொன்று
நாடரிய கேதார நாதனுக்கரச் சனையே.

இப்பாடலில், வில்வம், மருவுகூதம், (மர) ஊமத்தம், மாதுளை, நொச்சி, இலந்தை, கரத்தை, வன்னி, கத்திரி, நெல்லி, சண்பகம், மல்லிகை, தும்பை, மருதம், மந்தாரம், அலரி, விஷ்ணுகாந்தி, தேவதாரு, எருக்கு, மாவிலை, அருகம்புல் என்ற 21 பத்ரபுஷ்பங்களிள் கேதாரநாதருக்குச் சிறப்பானவை என்று கூறுகிறது.

வில்வ இலையின் தெய்வங்களும், மஹிமைகளும் :

இச்சா ஞான கிரியாசக்தி பில்வபத்ர த்ரயம்விது :1
தர்சநாத் பில்வபத்ரஸ்ய ஸ்பர்சநாத் வதநாதவி :1
அஹோராத்ர கிருதம்பாபம் நச்யதே நாத்ரஸம்யச:1
பில்வபத்ரை ரகண்டைச்ச ஸகிருத்லிங்கம் ப்ரபூஜயேத்.
ஸர்வபாப விநிர்முக்த : சிவலோகே மஹீயதே.

வில்வத்தின் மூன்றுதளங்களில் இச்சா, ஞான, கிரியா என மூன்று சக்திகள் விளங்குகின்றன. எனவே வில்வ மரத்தை தரிசிப்பதாலும், ஸ்பரிசிப்பதனாலும், நமஸ்கரிப்பதனாலும் ஒருநாள் முழுவதும் செய்தபாவம் அனைத்தும் அழிந்துவிடும் என்பதில் ஐய்யமில்லை. உத்தமமான வில்வபத்திரங்களை சிவலிங்கத்துக்கு அர்ச்சித்தால் எல்லா பாவங்களில் இருந்தும் விடுபட்டு நிறைவான சிவலோகத்தை அடையலாம்.

சிறப்பு பத்ரபுஷ்பமஹிமை மகுடாகமத்தில் கூறப்படுவதாவது.

ஏகாப்தம் பில்வபத்ரம் ஸ்யாத் ததா சுவேதாதுளஸ்ய பி.
ஷண்மாஸம் சார்க்கபுஷ்பம்து கரவீரம் தினத்ரயம் (மகுடாகமம்)

பொருள் : வில்வம், வெள்ளைத்துளசி இவ்விரண்டும் ஒருவருடம் பூஜை செய்த பலனையும், எருக்கம்பூ, ஆறுமாதம் பூஜை செய்த பலத்தையும், அலரி மூன்று நாட்கள் பூஜை செய்த பலத்தையும் கொடுக்கும் என்பதாம். மேலும் சிலவற்றிற்கு மறுஉபயோக சிறப்பு விதியாக.

துளசீ பில்வபத்ரம்ச பலாசம்ச சுவர்ணகம்.
ப்ரக்ஷாள்ய பரசோநம் அர்ச்சயேத்து புனப்புன :

பொருள் : துளசி, வில்வம், பலாசம், (பொரசம்பூ) சுவர்ணபுஷ்பம், (பொன்னாலானபூ) என்னுமிவற்றை ஸ்ரீ மகாதேவருக்குச் சாற்றி பூஜித்து, பின்பு எடுத்து, மீளமீளக்கழுவியபின் மீண்டும் அதனால் அர்ச்சிக்கலாம் என்பதாம். பஞ்சவில்வங்களாலும் இவ்விதம் சிவனை அர்ச்சிக்கலாம்.

செழுத்திடுந் துளபமுஞ் சிறந்த வில்வமும்
வழுத்துபொன்னூ மத்தமு மலரு நீலமு
மழுத்துசெம் பொன்மல ரதனைப் போலவே
கழுத்தநிர் மாரியங் கழுவிச் சாத்தலாம்.

இப்பாடல் துளசி, வில்வம், ஊமத்தைப்பூ, நீலோற்பலம் ஆகியவை இயற்கையில் உண்டானவை,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவை தங்கத்தால் செய்யப்பட்டவைக்கு சமமாகும். எனவே, இவை நிர்மால்யமாய்விடினும் தூயநீரால் கழுவப்பட்டு புதியன போலவே மீண்டும் இறைவனுக்குச் சாற்றலாம் என்கிறது.

பத்ரச்சேதைஸ்து ஸம்பூஜா ராக்ஷஸாநாம் விநாசனம்.

புஷ்பச்சேதைஸ்து ஸம்பூஜா ஸர்வசித்திஹரீ பவேத் (காலோத்தராகம்)

எனும் வாக்கியங்களினால் பத்ரத்தை கிள்ளி பூஜித்தால் ராக்ஷஸர்கள் அழிவார்கள். ஆனால், புஷ்பத்தை கிள்ளி பூஜித்தால் எல்லா செல்வங்களும் நம்மை விட்டு நீங்கிவிடும் என அறிகிறோம்.

சுகந்தயுக்தைர் புஷ்பைஸ் ஸம்யக்லிங்கம் ப்ரபூஜயேத்.
மாலாபிர்வா சுகடிதைர் அனந்தபல மாப்னுயாத்.
மாலாபிர் வேஸ்டயேத்வேதீம் லிங்கம்ஸம் பூஜயேன்நர:
சிவோதேவ்யாச புத்ரேண மோததே பூஜயா(அ) நயா.
லிங்கவேதிர் பவேத் தேவீ லிங்கம் ஸாக்ஷாத் மஹேச்வர:
தயோஸ் ஸம்பூஜநாத் ஸ்யாதாம் தேவீ தேவச்ச பூஜிதௌ.

நன்கு தொடுக்கப்பட்ட மாலையினால் அனேக பலன்கள் உண்டாகும். மாலைகளை லிங்கத்தின் ருத்ரபாகம் நிறைந்து சாத்தினால் சிவனும், தேவியும் தன்னுடைய குமாரர்களான விநாயகர், முருகன் இவர்களோடு சேர்ந்து திருப்தி அடைவர்.

சிவஸ்யோபரி யக்குர்யாத் சுகதம் புஷ்பமண்டபம்
சோபிதம் மாலிகாத்யைர்ச ஆபீடாந்த ப்ரலம்பிபி
அத்யாச்சர்ய மஹாயாநைர் திவ்ய புஷ்போக சோபிதை :
ஸர்வைப் பரிவிருதஸ் ஸ்ரீமான்கச்சேத் சிவபுரம் சுகீ :

சிவபெருமானுக்கு புஷ்பமண்டபம் அமைத்தாலோ, புஷ்பமாலைகளால் அவர் பீடத்தை அலங்கரித்தாலோ வாழ்வின் முடிவில் வியக்கத்தகு புஷ்பக விமானத்தில் பரிவாரம் புடைசூழ சிவபுரம் சென்று சுகத்தை அடைவர் என்பது திண்ணம். வாழ்க சீரடியார் எல்லாம்.

சுபமஸ்து நித்யம்

மேன்மைக் கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம் !

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூக்களின் பெயர்கள்

1.	𑌅𑌰𑍍𑌕𑌪𑍁𑌷𑍍𑌪	எருக்கம்பூ
2.	𑌅𑌰𑍍𑌜𑌕𑌃	மாசிப்பச்சை
3.	𑌅𑌤𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃	குறுக்கத்தி
4.	𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌃	அநிச்சை
5.	𑌅𑌮𑍃𑌤𑌾	சீந்தில்
6.	𑌅𑌰𑍁𑌣𑍋𑌤𑍍𑌪𑌲𑌂	சிவப்பு அல்லி
7.	𑌆𑌮𑌲𑌕𑌃	நெல்லி
8.	𑌉𑌶𑍀𑌰𑌂	விளாமிச்சை
9.	𑌉𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌪𑍁𑌷𑍍𑌪(𑌧𑌤𑍍𑌤𑍂𑌰𑌪𑍁𑌷𑍍𑌪)	ஊமத்தம்பூ
10.	𑌉𑌙𑍍𑌕𑍁𑌤𑌾𑌰𑍁	அழிஞ்சில்
11.	𑌉𑌤𑍍𑌪𑌲𑌂	®நீலோத்பலம்
12.	𑌏𑌕𑌪𑌤𑍍𑌰𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌂	ஓரிதழ்தாமரை
13.	𑌕𑌦𑌲𑍀	வாழை
14.	𑌕𑌰𑌵𑍀𑌰𑌃	அரளி
15.	𑌕𑍁𑌰𑌵𑌕𑌃	மருதாணி
16.	𑌕𑍁𑌸𑍁𑌂𑌭𑌪𑍁𑌷𑍍𑌪	குசும்பைப்பூ
17.	𑌕𑍁𑌷𑍍𑌠𑌃	கீழ்காய்நெல்லி
18.	𑌕𑍁𑌮𑍁𑌦𑌃	ஆம்பல், அல்லி
19.	𑌕𑍁𑌨𑍍𑌦𑌃	முல்லைப்பூ
20.	𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌲𑍍𑌲𑍀	கருந்துளசி
21.	𑌕𑍇𑌤𑌕𑍀	தாழை
22.	𑌕𑍇𑌸𑌰𑌂	குங்குமப்பூ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூக்களின் பெயர்கள்

23.	𑌚𑌂𑌪𑌕𑌂	செண்பகப்பூ
24.	𑌜𑌾𑌤𑍀	ஜாதிப்பூ
25.	𑌜𑌾𑌜𑍀	சம்பங்கி
26.	𑌨𑌵𑌮𑌲𑍍𑌲𑌿𑌕𑌾	இருவாட்சி
27.	𑌨𑌾𑌗𑌪𑍁𑌷𑍍𑌪𑌂	நாகப்பூ
28.	𑌨𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌂	நந்தியாவட்டை
29.	𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑍍𑌡𑍀	நொச்சில்
30.	𑌆𑌰𑌗𑍍𑌵𑌧𑌃	கொன்றை
31.	𑌤𑍁𑌲𑌸𑍀	துளசி
32.	𑌤𑍃𑌣𑌂	புல்
33.	𑌦𑌮𑌨𑌃	மருக்கொழுந்து
34.	𑌧𑌤𑍍𑌤𑍂𑌰𑌃	பொன்னூமத்தை
35.	𑌦𑍂𑌰𑍍𑌵𑌾	அறுகு
36.	𑌦𑍇𑌵𑍀	ஸஹதேவியார்
37.	𑌦𑍍𑌰𑍋𑌣𑌪𑍁𑌷𑍍𑌪𑌂	தும்பைப்பூ
38.	𑌪𑌦𑍍𑌮𑌂	தாமரை
39.	𑌪𑌾𑌰𑌿𑌜𑌾𑌤𑌃	பவழமல்லி
40.	𑌪𑌾𑌟𑌲𑌾 𑌪𑌾𑌟𑌲𑍀	பாதிரி
41.	𑌪𑌾𑌟𑍀𑌰𑌂	சந்தனம்
42.	𑌪𑍍𑌰𑌿𑌯𑌙𑍍𑌗𑍁𑌃	ஞாழல்
43.	𑌪𑍀𑌶𑌾𑌚𑍀	பேராமல்லி,
44.	𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂	வெண்தாமரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூக்களின் பெயர்கள்

45	𑌪𑍁𑌨𑍍𑌨𑌾𑌗𑌂	புன்னாகப்பூ
46.	𑌪𑌤𑍍𑌰𑌂	இலை
47.	𑌬𑌨𑍍𑌧𑍂𑌕𑌃	உச்சித்திலகம்
48.	𑌬𑌨𑍍𑌧𑍂𑌕𑌮𑍍	சம்பரத்தை
49.	𑌬𑌿𑌲𑍍𑌵𑌃	பில்வம்
50.	𑌬𑍃𑌹𑌤𑍀	முள்ளுக்கத்தரிக்காய்
51.	𑌭𑍂𑌰𑍍𑌜𑌪𑌤𑍍𑌰𑌮𑍍	பூர்ஜஇலை
52.	𑌧𑍂𑌰𑍍𑌤𑌪𑌤𑍍𑌰𑌮𑍍	ஊமத்தை
53.	𑌮𑌤𑍍𑌤𑌃	ஊமத்தை
54.	𑌮𑌞𑍍𑌜𑌰𑍀	பூங்கொத்து
55.	𑌮𑌯𑍂𑌰𑌂	நாயுருவி
56.	𑌮𑌲𑍍𑌲𑌿𑌕𑌾	மல்லிகைப்பூ
57.	𑌮𑌾𑌲𑌤𑍀	சிறுசெண்பகம், குண்டுமல்லி
58.	𑌮𑌨𑍍𑌦𑌾𑌰𑌂	மந்தாரப்பூ
59.	𑌰𑌕𑍍𑌤𑌕𑌾𑌰𑍍𑌪𑌾𑌸𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑍍	செம்பருத்திப்பூ
60.	𑌰𑌕𑍍𑌤𑍋𑌤𑍍𑌪𑌲𑌂	செங்கழுநீர்
61.	𑌰𑌾𑌜𑌵𑍃𑌕𑍍𑌷𑌃	கொன்னைமரம்
62.	𑌲𑌪𑍂	சீதேவியார் செங்கழுநீர், நாகப்பூ
63.	𑌲𑍋𑌧𑍍𑌰𑌮𑍍	வெள்ளலோத்தி
64.	𑌯𑍂𑌥𑌿𑌕𑌾	அடுக்குமுல்லை
65.	𑌬𑌕𑍁𑌲𑌂	மகிழம்பூ
66.	𑌪𑌾𑌵𑍀𑌰	புலிநகக்கொன்றை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூக்களின் பெயர்கள்

67.	வேணு:	மூங்கில்
68.	வேதஸ:	நீர்நொச்சில்
69.	ஶ்வேதார்க:	வெள்ளெருக்கு
70.	ஶ்வேதபுஷ்பீ	வெண்காக்கொன்றை
71.	ஶதவீர்யா	அறுகம்புல்
72.	ஶமீ	வன்னி
73.	ஶிபா	வேரு.மூலம் (நார் உள்ள வேர்)
74.	ஶிரீஷபுஷ்பம்	வாழைப்பூ
75.	ஶிவமல்லீ(பக:)	கொக்குமந்தாரை
76.	ஶ்ரீகரீகுஸுமம்	பில்வப்பூ, கதம்பபுஷ்பம்
77.	ஶ்ரீகண்ட:	சந்தனவேர்
78.	ஶ்ரீபத்ரம்	வில்வபத்திரம்
79.	ஶ்ரீதேவீ	ஸ்ரீதேவியார் செங்கழுநீர்
80.	ஸஹா(குரண்டக:)	குறிஞ்சி
81.	ஸூர்யாவர்த்தீ(ஸூர்யாப்ஜம்)	நீலத்தாமரை
82.	ஸஹதேவா	சிறுபீளை
83.	ஸேவந்தீ	ஸேவந்தி (ஜவந்தி) புஷ்பம்
84.	ஸ்தலாப்ஜம்	
85.	விஷ்ணுக்ராந்தம்(விஷ்ணுதயிதா)	விஷ்ணுகிராந்தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புஸ்தகத்தில் சொல்லப்பட்டுள்ள சில பூக்களின் படங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புஸ்தகத்தில் சொல்லப்பட்டுள்ள சில பூக்களின் படங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புஸ்தகத்தில் சொல்லப்பட்டுள்ள சில பூக்களின் படங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

ஶிவாய ருத்ராய ஶிவார்ச்சிதாய சந்த்ர பாவாய சிதீஶ்வராய ।
ஶாந்தாய ஸம்க்ஷோபாய ஸர்வேஶ்வராய ஶோணாத்ரி நாதாய நமஶ்ஶிவாய ॥

திவ்ய மண்டலார்ச்சனை மாஹாத்மியம்

முன்னுரை

சிவபெருமானின் முகத்தில் இருந்து தோன்றியவை சிவாகமங்கள், நாம் செய்யும் நித்யகர்மாக்கள் அதாவது (காலையில் எழுந்ததில் இருந்து இரவு சயனம் செய்யும் வரை) ஒரு மனிதனின் அன்றாட வாழ்க்கை முறைகளையும், விஞ்ஞான விஷயங்கள் ஆலயம் அமைக்கும் முறை, இறைவனை வழிபடும் முறைகள் இறைவனை உணர்வதற்கு யோக முறைகள் சித்தாந்தங்கள் போன்ற பல விஷயங்களை கூறி உள்ளார் பரமேஸ்வரர். ஆகமங்கள் 28 பேதமாகவுள்ளது அவற்றில் அனைத்து ஆகமங்களுக்கும் 4 பாதம் (சரியை, கிரியை, ஞானம், யோகம்) என்பதாகவுள்ளது அவைகளுக்கு உபாகமங்கள் 207, இவைகளை தொகுத்து வழங்கும் பத்ததிகள் 18 உள்ளன.

பதி, பசு பாசம்,

பதி -----பரமேஸ்வரர்

பசு -------ஆன்மாக்கள்

பாசம் -----ஆன்மாக்கள் இடத்தில் உள்ள கண்வ மாயைகள் (களிம்புகள்), பசுவானது பாசத்தை நீக்கி பதியை அடைவதற்கு பல வழிகளை சிவாகமங்களில் கூறுகின்றார். அதில் ஒரு வழிதான் இறைவழிபாடு இறைவழிபாட்டிற்கு சகளம் - உருவம், சகளாகளம் - அருவுருவம், நிஷ்களம்-அருவம் என்று மூன்று விதமாக மூர்த்தங்கள் கூறியுள்ளார். சகளம்-உருவம்-----சிவ பெருமானின் 25/64 மூர்த்தங்கள், சுப்ரமண்யர் போன்றவைகள் சகளாகளம் -----அருவுருவம்-----லிங்கம், மண்டலம் விமானம், கோபுரம், கும்பம் இதைப்போன்று மேலும் பல நிஷ்களம்----அருவம்----உருவமும் அருவமும் இல்லாமல் பரமேஸ்வரனை மனதால் உணர்வது இப்படியாக பசுக்களின் முக்திக்காக வழிபாடுகளை கூறுகின்றார். அருவுருவ வழிபாட்டு மூர்த்தங்களில் ஒன்றான மண்டலத்தைப் பற்றியும் கூறுகின்றார். இவ்வகையாக பூஜைக்கு ஏற்ற மண்டல வகைகள் வரையும் முறைகளையும் தேவதாக்களுக்கு ஏற்ற மண்டலங்களையும், மண்டலத்தில் வழிபடும் முறைகள் மண்டலத்தை பூஜைக்கு சொல்லி உள்ள காலங்கள், மண்டல வழிபாட்டின் பலன்கள் என்று விரிவாக பல ஆகமங்கள் மூலமாக சிவபெருமான் கூறியுள்ளார். அவற்றுள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமக்கு கிடைத்துள்ள ஆகமங்களில் இவை சுப்ரபேதாகமத்தில் விரிவாக காணப்படுகிறது.

மண்டலம்.

ஃணூ௵ஂ ஸாவூகாஶிகஂ

மண்டலம் என்பது அனைத்து விருப்பங்களையும் தரவல்லது

ஃணூ௵ஂ ஸாாஶிதஂ௲ஂ ஸவூநெஷெவா௵யஂ கூரதஃ

அனைத்து வழிபாட்டிற்கும் மண்டலம் ஸாரமாக வழியாக அமைந்துள்ளது. மண்டலம் சகல விதமான தேவதைகளுக்கும் ஆலயமாகவே அமைகிறது.

ஸவூாவாவாநிஃஉஂஜெ தஜொஃணூ௵ஃஶூநாகூ

மண்டலத்தைப் பார்த்தாலே சகல வித பாவங்களும் போய்விடும் என்று பரமேஸ்வரரின் ஸூத்ரம் என அழைக்கப்படும் சரியாபாதத்தில் காணப்படுகிறது. ப்ரபஞ்சமே சதுர மண்டலத்தின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது.

ஒலி

மண்ணைப்பிரித்தாலும் பதம் பதமாகத்தான் பிரிக்க வேண்டும்.

ஒளி

சொல்லைப் பிரித்தாலும் பதம் பதமாகத்தான் பிரிக்கவேண்டும். ஆட்சிமுறைக்காக நம் நாட்டைக் கூட மண்டலம் மண்டலமாகத்தான் பிரிக்கின்றோம். ஆகவே பதத்தில், குறிப்பிட்ட உருவத்தைப்போடுவதுதான் மண்டலமாகும் மண்டலம் தான் ப்ரபஞ்சத்தின் மூலாதாரமாக அமைந்துள்ளது. அனைத்தும் நவபதத்தில் அடக்கம், அனைத்து சாஸ்திரங்களும் நவபதத்தை உயர்வாக கூறுகிறது.

